# யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்

## புத்தூர்

பரிசில் நாள் -2012

அதிபர் அறிக்கை

# PRIZE DAY - 2012

# Principal's Report

Chief Guest : Mr.V.Selvarajah Esq

( Z.D.E .Jaffna Zone)

Special Guest : Mr.K.Ratnakumar Esq

(Principal .- J/Union College ,Old Student)

**J/VATHARAWATTAI VIGNESWARA VIDYALAYAM**

**PUTTUR**

**06.10.2012**

# யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்

## புத்தூர்

**பரிசில் நாள் -2012**

**அதிபர் அறிக்கை**

**PRIZE DAY – 2012**

# Principal's Report

Chief Guest : Mr.V.Selvarajah Esq

( Z.D.E .Jaffna Zone)

Special Guest : Mr.K.Ratnakumar Esq

(Principal .- J/Union College ,Old Student)

**J/VATHARAWATTAI VIGNESWARA VIDYALAYAM**

**PUTTUR**

**06.10.2012**

# பரிசில் நாள் ~2012

காலம்: 06.10. 2012 .சனிக்கிழமை மு.ப 9 மணி

இடம்: பாடசாலைப் பிரதான மண்டபம்

**தலைமை**

திருமிகு.J.A.தவநாயகம் அவர்கள் ( பாடசாலை முதல்வர்)

**பிரதம விருந்தினர்**

திருமிகு.வ.செல்வராசா அவர்கள்

(வலயக்கல்விப் பணிப்பாளர்,யாழ்ப்பாணம்)

**சிறப்பு விருந்தினர்**

திருமிகு க.இரத்தினகுமார் அவர்கள்

(அதிபர்,யா/யூனியன் கல்லூரி,தெல்லிப்பழை. பழையமாணவன்)

**நிகழ்வுகள்**

- **விருந்தினர் வரவேற்பு**
- **கொடியேற்றல்**
- **மங்கள ஒளியேற்றல்**
- **இறைவணக்கம் ~வித்தியாலய மாணவர்கள்**
- **வரவேற்பு நடனம்**
- **வரவேற்புரை – திரு.மு.பேரின்பமூர்த்தி**
- **அதிபர் அறிக்கை**
- **மாணவர் பேச்சு -**
- **அபிநயப்பாடல் ~ ஆரம்பப்பிரிவு மாணவர்**
- **மாணவர் பேச்சு –**
- **பரிசில் வழங்கல் ~ விருந்தினர்கள்**
- **சிறப்பு விருந்தினர் உரை**
- Action Song- Primary
- **பிரதம விருந்தினர் உரை**
- **கோலாட்டம்**
- Action Song- Secandary
- **விவாத மேடை**
- English Song
- **நாடகம்**
- **நன்றியுரை**

மகுடவாசகம் **Motto**

கடமையே கண்

**Dutv First and Foremost**

## எமது நோக்கு Our Vision

அறிவுடன் ஆற்றலும்,கலையுடன் பண்பாடும் அமைவுறப் பெற்று,சமநிலை ஆளுமை கொண்ட நற்பிரசைகளைச் சமூகத்திற்கு வழங்கல்.

GENERATING GOOD CITIZENS ENDOWED WITH KNOWLEDGE AND CAPABILITIES,ART AND CULTURE AND A BALANCED PERSONALITY.

## எமது பணி Our Mission

1. .பயனுறுதிமிக்க கற்றற் செயற்பாடுகளினூடாக தேர்ச்சி இலக்கினை நோக்கிப் பயணித்தல்.

**Progressing towards Competency Goals through effective learning activities.**

2.விளைதிறன்மிக்க கற்றற் பேறுகளைக் கொண்ட மாணவர் மையக்கற்றற் செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தல்.

**Planning and implementing student-centred learning activities which have Productive learning outcomes.**

3..நல்லொழுக்கம்,மானிட விழுமியம்,தலைமைத்துவம்,21ஆம் நூற்றாண்டின் தொழில் மற்றும் வாழ்வியல் உலகிற்கான பிரவேசம்,சவால்களை வெற்றிகொள்ளும் திறன் ஆகியன கற்றற் பேறுகளில் பிரதிபலிக்கச் செய்தல்.

**Reflecting in learning outcomes high moral standards,human values,leadership qualities,requisites for entry into the world of work and life in the 21st century and ability to overcome challenges.**

4.இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் முழுமையான பங்களிப்புக்கும்,ஆற்றல் வெளிப்பாட்டுக்கும் வழிவகுத்தல்.

**Guiding for full involvement in co-curricular activities and for bringing out full Potentials.**

**மகுடவாசகம் Motto**

கடமையே கண்

**Dutv First and Foremost**

## எமது நோக்கு Our Vision

அறிவுடன் ஆற்றலும்,கலையுடன் பண்பாடும் அமைவுறப் பெற்று,சமநிலை ஆளுமை கொண்ட நற்பிரசைகளைச் சமூகத்திற்கு வழங்கல்.

GENERATING GOOD CITIZENS ENDOWED WITH KNOWLEDGE AND CAPABILITIES,ART AND CULTURE AND A BALANCED PERSONALITY.

## எமது பணி Our Mission

1. .பயனுறுதிமிக்க கற்றற் செயற்பாடுகளினூடாக தேர்ச்சி இலக்கினை நோக்கிப் பயணித்தல்.

**Progressing towards Competency Goals through effective learning activities.**

2.விளைதிறன்மிக்க கற்றற் பேறுகளைக் கொண்ட மாணவர் மையக்கற்றற் செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தல்.

**Planning and implementing student-centred learning activities which have Productive learning outcomes.**

3..நல்லொழுக்கம்,மானிட விழுமியம்,தலைமைத்துவம்,21ஆம் நூற்றாண்டின் தொழில் மற்றும் வாழ்வியல் உலகிற்கான பிரவேசம்,சவால்களை வெற்றிகாள்ளும் திறன் ஆகியன கற்றற் பேறுகளில் பிரதிபலிக்கச் செய்தல்.

**Reflecting in learning outcomes high moral standards,human values,leadership qualities,requisites for entry into the world of work and life in the $21^{st}$ century and ability to overcome challenges.**

4.இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் முழுமையான பங்களிப்புக்கும்,ஆற்றல் வெளிப்பாட்டுக்கும் வழிவகுத்தல்.

**Guiding for full involvement in co-curricular activities and for bringing out full Potentials.**

# அதிபர் அறிக்கை -2012

இன்றைய எமது பரிசில் நாள் -2012 விழாவை வெகுசிறப்புடன் நடாத்துவதற்கு இந்நந்நாளை எமக்களித்த எல்லாம்வல்ல இறைவனை முதற்கண் வணங்கி 2012 பரிசில் நாள் அதிபர் அறிக்கையினை தங்கள்முன் சமர்ப்பிப்பதில் பெருமையும் , பெருமகிழ்வடைகின்றேன்.

இன்றைய பரிசில் நாள் விழாவைச் சிறப்பிப்பதற்காக எமது அழைப்பினை ஏற்று பிரதம விருந்தினராக வருகை தந்து விழா அரங்கினைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் மதிப்பார்ந்த வலயக்கல்விப்பணிப்பாளர் திருமிகு. வ.செல்வராசா அவர்களே,இன்றைய விழாவின் சிறப்பு விருந்தினராக எமது அழைப்பினை ஏற்று வருகை தந்து விழா அரங்கைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் எம்மண்ணின் மைந்தன் மதிப்பார்ந்த அதிபர்,தெல்லிப்பழை யூனியன் கல்லூரி திருமிகு.க.இரத்தினகுமார் அவர்களே, அயற்பாடசாலைகளின் அதிபர்களே,ஆசிரியர்களே,பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் மற்றும் உறுப்பினர்களே,பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் மற்றும் உறுப்பினர்களே,பாடசாலைஅபிவிருத்திக்குழுவின் செயலாளர் மற்றும் உறுப்பினர்களே,அன்பார்ந்த பெற்றோர்களே,பழையமாணவர்களே,என்அன்பிற்கினிய ஆசிரியர்களே,அன்பார்ந்த மாணவச் செல்வங்களே உங்கள் அனைவருக்கும் இனிய காலை வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அனைவரையும் மனமகிழ்வுடன் வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இன்றைய எமது விழாவின் பிரதம விருந்தினர் மதிப்பார்ந்த வலயக்கல்விப் பணிப்பாளர் அவர்கள் வடமராட்சியைப் பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும் கொண்டவர்.பேராதனைப்பல்கலைக் கழகத்தின் வர்த்தகப்பட்டதாரியான இவர் பட்டப்பின்கல்வி டிப்ளோமா பட்டத்தையும், யாழ்பல்கலைக்கழகத்தின் கல்விமுதுமாணி பட்டத்தையும் பெற்றுக்கொண்டதுடன்,இன்று இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் ஒன்றைச் சார்ந்த சிரேஷ்ட கல்வி நிர்வாகியாக நம் பிரதேசத்தில் திகழ்கின்றார். ஆசிரியராக,கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் அதிபராக,மருதங்கேணிக் கோட்டக்கல்விப்பணிப்பாளராக, தென்மராட்சிக் கல்வி வலயம்,வடமராட்சிக் கல்விவலயம் ஆகியவற்றின் வலயக் கல்விப் பணிப்பாளராக அரும் பணியாற்றி தற்போது யாழப்பாணம் கல்வி வலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளராக கடந்த சில மாதங்களாகப் பணியாற்றி வருகின்றார்.சிறிய பாடசாலைகளின் முன்னேற்றத்திலும், வளர்ச்சியிலும் பெரும் அக்கறை கொண்டு செயற்படும் இவரின் வருகையால் நாம் பேருவுவகையடைகின்றோம்.அவரது சேவை எமது பிரதேசத்தில் தொடரவும்,அவரது சேவையால் எமது கல்வி வளம் சிறக்கவும் இவ்வேளையில் வாழ்த்தி நிற்கின்றோம்.

இன்றைய விழாவின் சிறப்பு விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் வாதரவூர் மண்ணின் மைந்தன் திரு.க.இரத்தினகுமார் அவர்கள் ஆரம்பக்கல்வியை எமது பாடசாலையில் கற்று தரம் 5 N.P.T பரீட்சையில் சித்தியடைந்து யா/புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியில் இடைநிலை மற்றும் உயர்கல்வியைக்கற்றுக்கொண்டார். 1979 இல் ஆசிரிய சேவையில் இணைந்து கொண்ட இவர் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் கணித ஆசிரியர் பயிற்சியை நிறைவு செய்து,பயிற்றப்பட்ட கணித ஆசிரியராக 1986 முதல் 1996 வரை கிளிநொச்சி மாவட்டத்தின் பல பாடசாலைகளில் பணியாற்றியதுடன்,அதிபர் சேவையிலும் இணைந்து கொண்டார்.1997 முதல் 2006 வரை இராமநாதபுரம் ம.வி 1சீ பாடசாலையின் அதிபராகவும்,2007 முதல் 2009 வரை யா/கிளிநொச்சி மத்திய கல்லூரி 1 ஏபி பாடசாலையின் அதிபராகவும் பணியாற்றியதுடன் 2010,2011 காலப்பகுதியில் கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தில் மாணவர் அபிவிருத்தி பிரதிக் கல்விப்பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார்.தற்போது யா/தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றி வருகின்றார்.பயிற்றப்பட்ட கணித ஆசிரியர் என்பதுடன்,பேராதனைப்பல்கலைக்கழகத்தின் கலைப்பட்டதாரியும், யாழ் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா,கல்வி முதுமாணிப் பட்டங்களைப் பெற்றவராகவும் திகழ்கின்றார்.தாய்மண்ணின் வளர்ச்சியிலும்,எமது

பாடசாலையின் உயர்ச்சியிலும் ஆதரவும்,அக்கறையும் கொண்டு விளங்கும் இவரது வருகையால் நாம் பெருமகிழ்வடைகின்றோம்.அவர் சேவையில் சிறந்து விளங்க இவ்வேளையில் வாழ்த்தி மகிழ்கின்றோம்.

கடந்த ஆண்டில் பரிசளிப்பு விழாவினை நடாத்தியதுடன் தொடர்ந்தும் ஒவ்வோராண்டும் எமது பாடசாலையில் பரிசில் வழங்கும் விழாவை நடாத்த வேண்டுமென்ற எமது தீர்மானத்தை கடந்த ஆண்டில் எமது அறிக்கையில் முன்வைத்தோம்.அத்தீர்மானத்திற்கமைய இவ் ஆண்டிற்கான பரிசில் வழங்கல் விழா அரங்கேறும் இந்நாளை எமக்களித்த இறைவனுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இன்றைய விழாவின் அதிபர் அறிக்கையினைத் தொடர்கின்றேன்.

## எமது மகுட வாசகம் (MOTO)

**கடமையே கண் (Duty First Foremost)** எனும் கூற்றினைத் தனது மகுட வாசமாகக் கொண்ட எமது பாடசாலை கடமையில் கண்ணியமாய் ஒவ்வொருவரும் செயற்பட வேண்டுமென்பதை அனைவருக்கும் எப்போதும் வலியுறுத்தி நிற்கின்றது.

எமது பாடசாலையின் **தூரநோக்கு ( Vision**)

**அறிவுடன் ஆற்றலும், கலையுடன் பண்பாடும் ஒருங்கே அமையப் பெற்ற , சமநிலை ஆளுமை கொண்ட நற்பிரசைகளை சமூகத்திற்கு வழங்குதல்**

என்பதனை தூர நோக்காகக் கொண்டுள்ளது.

மாணவர்கள் அறிவுடன் ஆற்றல்களையும் பெறவேண்டும்.பாடசாலைகள் அறிவை மாத்திரம் வளர்க்கின்றன,ஆற்றல்களை வளர்க்கவில்லையென்ற தேசியக் குற்றச்சாட்டினை ஏற்று மாணவர்கள் அறிவுடன் பல்வேறு ஆற்றல்களையும் பெறவேண்டும் என்ற நோக்கில் அதற்கான சந்தர்ப்பங்களைப் பாடசாலைக்காலத்தில் உருவாக்கிக் கொடுக்கப்படல் வேண்டுமென்பது எமது நோக்கமாகும். அத்துடன் கலைத்திறனும்,கலாசார விழுமியங்களை பின்பற்பவர்களாகவும்,பாரம்பரியங்கள், பண்பாட்டினை மதிப்பவர்களாகவும்,பேணுபவர்களாகவும் வளர்த்தெடுத்து பூரணத்துவம் மிக்க மனிதர்களை சமூகத்திற்கு வழங்கி எமது சமூகத்தின் தேவையை நிறைவேற்றுதல் எமது பாடசாலையின் நீண்ட எதிர்பார்ப்பாகும்.

இத்தூர நோக்கினை நோக்கிய எமது பயணத்தில் படிக்கற்களாக **எமது பணிகளை** வறையறுத்து முன்வைத்துச் செயற்பட்டு வருகின்றோம். ஆரம்பக்கட்டத்திலேயே எமது செயற்பாடுகள் தொடர்கின்றன. நிறைவேற்ற வேண்டியவை பல எம் முன்னே உள்ளன.

## எமது பணிகள் (Mission)

**பணி-1. பயனுறுதிமிக்க கற்றல் செயற்பாடுகளினூடாக தேர்ச்சி இலக்கினை நோக்கிப் பயணித்தல்.**

என்பதை எமது முதலாவது பணியாகக் கொண்டுள்ளோம்.அந்தவகையில் கற்றல் செயற்பாடுகளை பயனுறுதிமிக்கதாக மேற்கொள்ளும் வகையில் எமது கற்பித்தல் முறைமையினை மேற்கொள்ள வேண்டுமென்பது எமது எதிர்பார்ப்பும் எமது பணியுமாகும்.அதற்காக தேர்ச்சி மட்டத்தினை அடையத்தக்கதான கற்றல் உத்திகளை உள்ளடக்கிய முறையான பாடத்திட்டமிடல் , குழச்செயற்பாடுகள், உபகரணப் பயன்பாடு, கற்றலுக்குகந்த கணிப்பிடற் செயற்பாடுகள் என்பன மேற்கொள்ளப்பட்டு பயனுறுதிமிக்க கற்றல்

நிகழ்வதற்கு வாய்ப்பளிக்கப்படல் வேண்டும்.அத்தகைய நிலையை நோக்கி எமது வகுப்பறைச் செயற்பாடுகள் அமைய வேண்டும்.அதனை நோக்கி நாம் நகர்ந்து வருகின்றோம்.

**பணி-2: விளைதிறன்மிக்க கற்றல் பேறுகளைக் கொண்ட மாணவர் மையக்கற்றற் செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தல்.** என்பது எமது இரண்டாவது பணியாகும்.

1. கற்றல் கற்பித்தலில் மாணவர் செயற்பாடுகளுக்கு இடமளித்தல்.
2. குழுச்செயற்பாடுகள் , முன்வைப்புக்கள் என்பனவற்றை முறையாகத் திட்டமிட்டுச் செயற்படுத்தல்.
3. கற்பித்தலில் உபகரணங்களைப் பயன்படுத்தல்.
4. செயலட்டைகள்**,**வேலைப்படிவங்கள் வழங்கிச் செயற்படுத்துதல்.
5. மாணவர் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல்.
6. ஆசிரியர் எப்போதும் வளவாளராகச் செயற்படல்,மாணவர்களை வழிப்படுத்தல்.

ஆகிய செயற்பாடுகள் மூலம் விளைதிறன் மிக்க கற்றற்பேறுகளை அடைய முயற்சிக்கின்றோம்.

**பணி 3: நல்லொழுக்கம்,மானிட விழுமியம்,தலைமைத்துவம்,21ஆம் நூற்றாண்டின் தொழில் மற்றும் வாழ்வியல் உலகிற்கான பிரவேசம் , சவால்களை வெற்றிகொள்ளும் திறன் ஆகியன கற்றற் பேறுகளில் பிரதிபலிக்கச் செய்தல்.** என்பது எமது மூன்றாவது பணியாகும்.

1. ஒழுக்கப்பண்புகளைத் தினமும் போதித்து நல்லொழுக்கம் மிக்கவர்களாக மாணவர்களை வளர்த்தெடுத்தல்.
2. விழுமியக் கருத்துக்களை அறிவுரைகளாகவும்**,**நற்சிந்தனைகளாகவும் மாணவரிடத்தே

புகுத்தல்.காலைக்கூட்டங்களில் வழங்கப்படும் நற்சிந்தனைகள்,அறிவுரைகள் என்பனவும் ஏனைய சந்தர்ப்பங்களிலும் இதற்கான பயிற்சிகள் வழங்கப்படுகின்றது.

3. தலைமைத்துவத்திற்கான வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றது. காலைக்கூட்ட நிகழ்வுகள்,மாணவர் மன்றங்கள்,மாணவர் தலைவர்கள்,வகுப்புத்தலைவர்கள் என்பனவற்றின் மூலம் வழங்கப்படுகின்றது.தலைமைத்துவ ஆற்றல்களை மேலும் மேம்படுத்த முயற்சிக்கப்படுகின்றது.
4. தொடர்பாடற்திறன்,மொழித்திறன் விருத்திக்கான வாய்ப்புக்கள் மேலும் விருத்தியாக்கப்பட வேண்டியுள்ளது.
5. தடைகளுக்கும்,இடர்களுக்கும் முகங்கொடுக்கும் ஆற்றல்,பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தலில் பயிற்சி என்பனவற்றை வழங்குவதில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

**பணி 4: இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் முழுமையான பங்களிப்பிற்கும்,ஆற்றல் வெளிப்பாட்டிற்கும் வழிப்படுத்துதல்.** இது எமது நான்காவது பணியாகும்.
வருடாந்தம் மெய்வல்லுநர் போட்டிகள் அத்துடன் பெருவிளையாட்டுக்களில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்கள் ,தமிழ்மொழித்தினப் போட்டிகள்,ஆங்கில தினப் போட்டிகள் மற்றும் போட்டிகள்,மாணவர் மன்றங்கள் ,விழாக்கள் குறிப்பாக தமிழ்விழா, பரிசளிப்பு விழா ,கலைமகள் விழா ஆகிய இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்

வருடாந்தம் எமது பாடசாலையில் நடைபெற்று வருகின்றது.இவற்றில் மாணவர் பங்குபற்றலை ஊக்குவித்து வருகின்றோம்.

இவ்வாறாக எமது பிரதான பணிகள் நான்கினையும் நிறைவேற்றுவதை எமது பணியாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றோம்.இப் பணிகளில் தொடர்வதற்கும் , மேலும் மேலும் வலிமையுடையதாக வளர்ந்து செல்வதற்கும் அனைவரும் இணைந்து அர்ப்பணிப்புடனும்,ஆர்வத்துடனும் பணியாற்ற வேண்டியுள்ளது.அனைவரும் இணைவோம்,பொறுப்புக்களை உணர்ந்து அர்ப்பணிப்புடன் பணி செய்வோம்.

## எமது மாணவர் விபரம்

| மொத்த மாணவர்கள் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|
| 240 | | |
| ஆரம்பப்பிரிவு மாணவர் தொகை தரம் 1 – 5 வரை | ஆண்கள் 60 | பெண்கள் 66 |
| | | |
| இடைநிலைப் பிரிவு மாணவர் தொகை தரம் 6 – 11 வரை | ஆண்கள் 51 | பெண்கள் 50 |
| மொத்தம் | 111 | 116 |

மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான குடும்ப எண்ணிக்கை கொண்ட இப்பிரதேசத்துக்குரிய பாடசாலை என்ற வகையில் மாணவர் எண்ணிக்கையும் மட்டுப்படுத்தப்பட்டதாகும்.

- கல்வி கற்கும் வயதுடைய அனைவரும் எமது பாடசாலையில் கல்வி கற்று வருகின்றனர்.
- பாடசாலை சேர்வு வீதம் **100%** மாக தற்போது பேணப்படுகின்றது.
- இடைவிலகுவோர் எண்ணிக்கை மிகக் குறைந்த மட்டத்தில் உள்ளது.
- மாணவர்களின் நாளாந்த வரவு வீதம் 89-90 **%** மாகவுள்ளது.
- குறிப்பிட்ட சில மாணவர்களின் தினவரவில் ஒழுங்கற்ற நிலை காணப்படுகின்றது.பெற்றோர்களின் அக்கறையின்மை காரணமாக இம்மாணவர்களின் சீரான வரவினை மேம்படுத்துவதில் சிரமப்படுகின்றோம்.பாடசாலையின் வரவுக்குழு மூலம் மாணவர்வரவினை **100%** ஆகப் பேணுவதற்கு முயற்சித்து வருகின்றோம்.

❖ தரரீதியாக மாணவர் விபரம் :-

| தரம் | ஆண் | பெண் |
|---|---|---|
| 1 | 13 | 17 |
| 2 | 10 | 09 |
| 3 | 09 | 12 |
| 4 | 10 | 11 |
| 5 | 18 | 17 |
| மொத்தம் | 60 | 66 |

| தரம் | ஆண் | பெண் |
|---|---|---|
| 6 | 16 | 13 |
| 7 | 06 | 10 |
| 8 | 11 | 07 |
| 9 | 07 | 04 |
| 10 | 04 | 07 |
| 11 | 07 | 09 |
| மொத்தம் | 51 | 50 |

மாதாந்த மாணவர் வரவுச்சராசரி பின்வருமாறு:-

| மாதம் | வரவுச்சராசரி | மாதம் | வரவுச்சராசரி |
|---|---|---|---|
| .ஜனவரி | **89.4%** | .மே | **91.2%** |
| பெப்ரவரி | **90.0%** | யூன் | **89.8%** |
| மார்ச் | **90.5%** | யூலை | **90.0%** |
| ஏப்ரல் | **91.29%** | ஆகஸ்ட் | **100%** |

## எமது ஆசிரிய அணியினர் விபரம்

| மொத்த ஆசிரியர் எண்ணிக்கை | பயிற்றப்பட்ட பட்டதாரிகள் - 03 | பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் 06 | பயிற்றப்படாத பட்டதாரிகள் :-07 |
|---|---|---|---|
| 16 | அதிபர் - 01<br>கணிதம் -01<br>விஞ்ஞானம் -01 | ஆரம்பக்கல்வி -03<br>வர்த்தகம் -01<br>ஆங்கிலம் -01<br>விவசாயம் -01<br>(பகுதி நேரம்) | ஆரம்பக்கல்வி – 03*<br>தமிழ் -- 01<br>ஆங்கிலம் -- 01*<br>சங்கீதம் --01<br>சித்திரம் --01<br>(பகுதி நேரம்) |
| 16 | 03 | 06 | 07 |

*இருவர் பட்டப்பின் டிப்ளோமா பயின்று வருகின்றனர்.

❖ எமது மொத்த ஆசிரிய அணியில் 05 பெண் ஆசிரியர்களும்,11 ஆண் ஆசிரியர்களும் பணியாற்றுகின்றனர்.

❖ இருவர் பகுதி நேர ஆசிரியர்களவர்,அவர்கள் வாரத்தில் மூன்று நாட்கள் எமது பாடசாலையிலும் இரு நாட்கள் வேறு பாடசாலைகளிலும் பணியாற்றுகின்றனர்.
❖ ஆசிரியர்களின் நாளாந்த வரவுச்சராசரி வீதம் 80 % மாகப் பேணப்படுகின்றது.
❖ ஆசிரியர்களின் மாதாந்த வரவுச்சராசரி வீதம் பின்வருமாறு அமைந்துள்ளது.

| மாதம் | வரவுச்சராசரி | மாதம் | வரவுச்சராசரி |
|---|---|---|---|
| ஜனவரி | 93.4% | மே | 85.0% |
| பெப்ரவரி | 91.8% | யூன் | 82.0% |
| மார்ச் | 88.1% | யூலை | 85.0% |
| ஏப்ரல் | 85.0% | ஆகஸ்ட்- | 98.0% |

பல்வேறு சிரமங்களுடனும்,நீண்ட தூரப் பயணங்கள் ஊடாகவும் வருகை தந்து பாடசாலை முன்னேற்றத்திற்காக பணியாற்றுகின்ற எமது ஆசிரிய அணியினரின் உன்னத சேவையினைப் பாராட்டுவதுடன் , அவர்கள் சேவையிலும் , அர்ப்பணிப்பிலும் சிறந்து விளங்கிட இறையருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

இடமாற்றம்:-
எமது பாடசாலையில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக சித்திரப் பாட பகுதிநேர ஆசிரியராகச் சிறப்பாகப் பணியாற்றி வந்த **திரு. ப.பிரதீபன்** வலிகாமம் வலயப் பாடசாலைக்கு இவ்வாண்டின் ஜனவரி முதல் இடமாற்றம்பெற்றுச் சென்றுள்ளார்.

**திருமதி .சத்தியப்பிரியா கஜேந்திரன்** நடன ஆசிரியராக கடந்த 2011 ஆகஸ்ட் முதல் நியமனம் பெற்று வந்து பணியாற்றி நான்கு மாதங்களில் அதாவது 2011 டிசம்பரில் யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளராக நியமனம் பெற்றுச் சென்றுள்ளார்.

ஆசிரிய உதவியாளராகப் பணியாற்றிய **திருமதி.கலாசினி கிருபாகரன்** பயிற்சிக்காக ஆசிரிய கலாசாலை சென்றுள்ளார்.

இவர்கள் மூவரது பணிக்காக எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதுடன் சென்ற இடங்களில் அவர்களது பணிகள் சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

- அடுத்து இக்காலப் பகுதியில் **இடமாற்றங்கள்** மூலமோ,புதிய நியமனங்கள் மூலமோ எவரும் எம்மோடு இணைந்து கொள்ளவில்லை.

➢ **திருமணபந்தந்தில் இணைந்து கொண்டோர்கள்:**

- **செல்வி கலாசினி கிருபாகரன்** உடனும்
- **செல்வி வித்யா நவநீதன்** உடனும் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டனர். இவர்கள் சகல சௌபாக்கியங்களும் பெற்று மகிழ்வுடன் வாழ நாமும் மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

# எமது பாடசாலையின் பண்புத்தரவிருத்திக்கான செயற்பாடுகள்

# Quality of Education Activities in Our School

பாடசாலைக் கல்விச் செயற்பாட்டில் பண்புசார்தரத்தினை மேம்படுத்தும் நோக்கில் கல்விஅமைச்சால் வரையறுக்கப்பட்டுள்ள பிரதான துறைகள் எட்டினையும் எமது பாடசாலையில உச்ச அளவில் விருத்தியாக்கும் நோக்கில் ஆசிரிய குழுக்கள் அமைக்கப்பட்டு அக்குழுக்களினால் சுயமதிப்பீடு செய்யப்பட்டு மேம்படுத்த வேண்டிய அம்சங்கள் இனங்காணப்பட்டு, ஒவ்வொரு சுட்டியினையும் உச்ச அளவில் விருத்தியாக்கிக் கொள்ள முயற்சிக்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு துறைகளுக்கும் மதிப்பீட்டாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன், மேம்படுத்தலுக்கான செயற்பாடுகளைத் திட்டமிடவும்,செயற்படுத்தவும் ஒவ்வொரு துறைக்கும் குழுக்கள் செயற்படுகின்றது.

## பொதுமுகாமைத்துவம்

## General Management

1.முதலாவது பண்புத்தரம்:-

முகாமைத்துவ நடவடிக்கைகள், நிர்வாக நடவடிக்கைகளுக்குத் தேவையான விடயங்களை மேம்படுத்துதல் இத்துறைசார்ந்த சுட்டிகள் மூலம் வலியுறுத்தப்படுகின்றது.அலுவலக நடவடிக்கைகளை மேம்படுத்துதல்,கோவைகளைச்சீரமைத்தல்,வெளிப்படையான நிதிமுகாமைத்துவத்தைப் பேணல்,முறையான தகவல் முறைமையினை பேணிவருதல் என்பன மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளாகவுள்ளது.இவற்றை எம்மால் இயன்ற அளவுக்கு படிப்படியாக மேம்படுத்தி வருகின்றோம்.இதனை மேம்படுத்தும் பணியில் இத் துறை சார்ந்த குழு செயற்பட்டுவருகின்றது.

- ❖ இத்துறையின் மதிப்பீட்டாளர் - திரு மு.பேரின்பமூர்த்தி
- ❖ செயற்பாட்டுக்குழு : அதிபர்
  உப அதிபர்

## பௌதிக,மனிதவள முகாமைத்துவம்

## Physical &Human Resources Management

2ஆவது பண்புத்தரம்:-

பௌதிகவளத்தினையும்,மனித வளத்தினையும் உச்சமாகப் பயன்படுத்தும் வகையிலும்,நிறுவனத்தின் அபிவிருத்திக்கேற்ற வகையிலும் பயன்படுத்தத் தக்கதாகச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியமை இங்கு வலியுறுத்தப்படுகின்றது

- ❖ பாடசாலைக்காணி முடிந்த அளவுக்கு பயன்படுத்தப்படுகின்றதுடன் பராமரிக்கப்படுகின்றமைக்கான எமது முயற்சிகள்:

  பாடசாலைக்காணியை முழுமையாகப் பயன்படுத்துவதில் நாம் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றோம்.வேலிகள் பாதுகாப்பானதாக இல்லாததால் பயன்தரு மரங்களை நாட்டி வளர்ப்பதிலும்,பாடசாலைத் தோட்டத்தினை முறையாக நடைமுறைப் படுத்துவதிலும் நாம் தொடர்ச்சியாக பெருங் கஷ்டத்தை எதிர்நோக்குகின்றோம்.இருந்த போதும் பலவேறு மரங்கள் நாட்டப்பட்டும், பூந்தோட்டங்களை அமைத்தும் மிகுந்த சிரமத்துடன் பராமரித்து வருகின்றோம்.

❖ பாடசாலைக் கட்டடங்கள் முறையாக பராமரிக்கப்படுவதற்கான முயற்சிகள்:

போதுமான வகுப்பறைகள் இன்மை எமக்கு பெரும்பிரச்சினையாகவுள்ளது.அதற்காக புதிய வகுப்பறைக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான கோரிக்கையை கடந்த வருடம் முதலாக நாம் கல்வித்திணைக்களத்தினூடாக சகல தரப்பினரிடத்தும் விடுத்து வருகின்றோம். இதுவரை கைகூடுவதற்கான அறிகுறிகள் எதுவும் கிடைக்கவில்லை.

மேலும் கட்டடங்களின் பராமரிப்பு தொடர்பாகவும் எமக்குப் பிரச்சினைகள் ஏற்படுகின்றது.கட்டடங்களில் உள்ள கம்பிவலைகள் விரைவாகத் துரப்பிடித்து பழுதடைந்து விடுகின்றன. அவற்றை வருடாந்தம் வர்ணம் பூசி பராமரிக்க வேண்டியுள்ளது.அதைவிட கதவுகள்,யன்னல்கள் ,வகுப்பறை நிலம் என்பன உடைந்தும்,சேதமடைந்தும் உள்ளது.இவ்வாறான திருத்தங்களைச் செய்வதற்கான கோரிக்கைகளையும் திணைக்களத்திடம் விடுத்து வருகின்றோம்.

வகுப்பறைகள் தகரத்தட்டிகள் மூலம் பிரிக்கப்பட்டு வகுப்பறைச் சூழல் பேணப்படுகின்றது.வகுப்பறைகளின் சுத்தம்,பாடசாலைச் சுற்றுப்புறச் சுத்தம் என்பன நாளாந்தம் கவனிக்கப்படுகின்றது.

❖ பாடசாலையின் உட்கட்டமைப்பு வசதிகள் முறையாகப் பேணப்படுவதற்கான முயற்சிகள்:

மின்சாரவசதி செய்யப்பட்டுள்ளது.எனினும் அனைத்துக் கட்டடங்களிலும் மின்னிணைப்புவசதி இல்லை.பிரதான மண்டபம் மற்றும் ஆரம்ப,இடைநிலை வகுப்புக்களுக்கு மின்சார வசதியின்றி உள்ளன.இக்கட்டடங்களுக்கான மின்னிணைப்பு வசதியை ஏற்படுத்த வேண்டியதும் எமது தேவையாகவுள்ளது.

குடிநீர் வசதி குழாய் மூலம் எமக்குக் கிடைக்கின்றது.அவ்வாறு கிடைக்கும் நீர் குழாய் மூலம் உள்ளக விநியோகம் செய்யப்படுகின்றது.சிலகாலங்களில் கிடைக்கின்ற நீரின் அளவு போதாததாகி விடுகின்றது.அவ்வாறான நிலைமைகளில் குடிநீரைப் பெறுவதில் நாம் சிரமப்படுகின்றோம்.மேலதிக நீர் கிடைக்கின்ற வேளையிலும் எமக்குத் தேவையான அளவு நீரைத் தேக்கிவைப்பதற்கான நீர்த்தாங்கி போதுமானதாக இல்லை.அதனால் பாடசாலை இடைவேளைக்குப் பிந்திய நேரத்தில் நீர்வசதி இல்லாத நிலை ஏற்பட்டு வருகின்றது.இதனைத் தவிர்த்துக் கொள்வதற்கு நீரைத்தேக்கி வைப்பதற்கான மேலதிக வசதிகள் செய்ய வேண்டியுள்ளது.அதற்காக பிளாஸ்டிக் நீர்த்தாங்கி வசதியை ஏற்படுத்தலாம் என எண்ணுகின்றோம்.இவ்வசதி ஏற்படுத்தப்படுமாயின் எமது குடிநீர்த்தேவையை போதுமான அளவுக்குப் பூர்த்தி செய்யமுடியும்.H.N.B Assurance காப்புறுதி நிறுவனம் எமது பாடசாலையின் குடிநீர் வசதிகளை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தினை மேற்கொள்ள முன்வந்துள்ளார்கள். இவ்வேலைத்திட்டத்தின் மூலம் எமது குடிநீர்வசதிக்கான தேவைகள் அனைத்தும் விரைவில் நிறைவு செய்யப்படும்.

மலசல கூட வசதிகள் இருபாலாருக்கும் உரியவாறு உள்ளது.அதனது சுத்தமும் முறையாகப் பேணப்பட்டு வருகின்றது.

விளையாட்டு முற்றத்தின் ஊஞ்சல் மற்றும் உபகரணங்கள் திருத்தப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது.மேலும் அதனை மேம்படுத்த வேண்டியுள்ளது.நிலத்தை மண்பரப்பி மட்டப்படுத்தி வேலியிட்டு அழகுபடுத்தி,உபகரணங்களையும் ஒழுங்குபடுத்தி அமைத்து கவர்ச்சிகரமானதாகவும் , போதுமானதாகவும் ஆக்கவேண்டுமென்பது எமது விருப்பமாகும்.அதற்குப் பெற்றோர் பழைய மாணவர்கள் பங்களிப்புத் தேவையாகவுள்ளது.

விஞ்ஞான ஆய்வுகூடம் , நூலகம் , அழகியற் கூடம் ஆகியன போதுமான அளவுக்கு வசதிகளைக் கொண்டதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

விளையாட்டு மைதானம் எமக்குச் சொந்தமானதாக இல்லாது விடினும் நாம் முழுமையாகப் பயன்படுத்தக் கூடியதாகவுள்ளது.விரைவில் அம்மைதானமும் எமக்குச் சொந்தமாகக் கூடிய சாத்தியம் உள்ளது.அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம்.அவ்வாறு விளையாட்டு மைதானம் கிடைக்கப்பெறின் அதனை

மண்பரப்பிச் சீரமைக்க வேண்டிய தேவையுள்ளது.மிக அவசியமான விளையாட்டு உபகரணங்கள் எம்மிடம் உண்டு.
இவ்வாறாக எமது பாடசாலையின் பௌதீக வளம் பேணப்பட்டுவருகின்றது.இத்துறை சார்ந்த ஏனைய விடயங்களை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகள் மேலும் மேலும் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.
எமது பாடசாலையின் மனிதவள முகாமை தொடர்பாக ஆசிரியர் தகவல் கோவைகள் முறையாகப் பேணப்படுகின்றது.வருடாந்தம் கடமைப்பட்டியல் தற்காலப்படுத்தப்பட்டு வழங்கப்படுகின்றது.ஆசிரியர் செயலாற்றுகை தரங்கணிப்பீட்டு செயற்பாடுகள் மேம்படுத்தப்பட வேண்டியுள்ளது.ஆசிரிய வாண்மை விருத்திக்கான செயற்பாடுகள் மேற்கொள்வதற்கான திட்டமிடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது.
இப் பிரமாணத்தின் **மதிப்பீட்டாளராக திரு .து.சயந்தன்** செயற்பட்டு வருகின்றார்.
**செயற்பாட்டுக் குழுவினர்: அதிபர்**
**திரு.மு.பேரின்பமூர்த்தி**
**திரு.து.ஜீவானந்தன்**
**திரு.து.சயந்தன்**

**3 ஆவது பண்புத்தரம்:**

## முறையான கலைத்திட்ட முகாமைத்துவமும் வகுப்பறை மதிப்பீடும்

## Curriculum Management & Class Room Evaluation

முறையான கலைத்திட்ட முகாமைத்துவம் பாடசாலைச் செயற்பாட்டின் உன்னதத்தை வெளிப்படுத்தும் பிரதான துறையாகும்.இத்துறையின் வினைத்திறனும் , விளைதிறனும் மிக்க செயற்பாட்டிற்காக நாம் தொடர்ந்து முயற்சித்து வருகின்றோம்.முறையான கலைத்திட்ட முகாமைத்துவ அமூலாக்கத்திற்காக நாம் பல விடயங்களில் விசேட கவனம் செலுத்த வேண்டியவர்களாகவுள்ளோம்.

1. ஆரம்பப்பிரிவு வகுப்பறைகளில் கற்றலுக்கான சூழல் மேலும் விருத்தியாக்கப் படவேண்டும்.
2. முதன்மை நிலை ஒவ்வொன்றிலும் அத்தியாவசியக் கற்றற் தேர்ச்சிகளை அனைத்து மாணவர்களும் அடையச்செய்வதில் வகைகூறும் நிலை ஏற்படுத்தப்படல் வேண்டும்.
3. ஆரம்பப்பிரிவில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் மேம்படுத்தல்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.
4. தரஉள்ளீட்டினை வினைத்திறன் மிக்க கற்றற் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தல் மேம்பட வேண்டியுள்ளது.
5. கற்றல் வளங்களை பொருத்தமானதாகப் பயன்படுத்தலில் கவனஞ் செலுத்த வேண்டியுள்ளது.
6. கணினிக் கற்றலுக்கான வாய்ப்புக்கள் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.இணைய வசதியை ஏற்படுத்துவதற்காக முயற்சிக்கப்படுகின்றது.
7. செயற்பாட்டு ரீதியான ஆசிரியர் மாணவர் பங்களிப்பு
8. பாடசாலை மட்டக் கணிப்பீட்டு செயற்பாடுகளை முறையாக நடைமுறைப்படுத்தல் என்பனவற்றையும்,இத்துறைசார்ந்த அனைத்து விடயங்களிலும் கவனஞ் செலுத்தி அவற்றை உச்ச அளவில் மேம்படுத்துவது எமது நோக்கமாகும்.அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இவற்றைமேம்படுத்திவலுப்படுத்தும்வகையில்உள்ளகவகுப்பறைமதிப்பீடுமேற்கொள்ளப்படுகின்றது..உள்ளகமதிப்பீட்டுக்குழுவில்அதிபருடன்,திரு.மு.பேரின்பமூர்த்தி,திருசி.ரவிச்சந்திரன் திரு.பொ.பரஞ்சோதி ஆகிய ஆசிரியர்கள் செயற்படுகின்றனர். ஆசிரியர் செயற்பாடுகளை மேம்படுத்தும் வகையில் வசதிகள் படிப்படியாக வழங்கப்பட்டு வருகின்றது.

இத்துறையின் மதிப்பீட்டாளராக திரு.சி.ரவிச்சந்திரன் ஆசிரியர் செயற்படுகின்றார்.
மேம்படுத்தற் குழுவினர் :திரு. சி.ரவிச்சந்திரன்
திரு.சு.இந்திரகுமார்
திரு.மு.பேரின்பமூர்த்தி
திரு.பொ.பரம்சோதி ஆகியோர்
செயற்படுகின்றனர்.

4ஆவது பண்புத்தரம்:

**இணைப்பாடவிதானச் செயற்பாட்டு முகாமைத்துவம்**

**CO-Curriculum Actvites Management**

நாம் தூரநோக்கில் எதிர்பார்ப்பது போல் சமநிலையான ஆளுமை வளர்ச்சிக்குப் பொருத்தமான இணைப்பாட விதானச் செயற்பாடுகளை வினைத்திறனுடன் நடாத்துவதற்கு ஒவ்வோராண்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது.

1. .வருடாந்தம் அனைத்து மாணவர்களும் பங்குபற்றும் வகையில் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நடாத்தப்படுகின்றது.**கம்பன்,வள்ளுவன்,இளங்கோ** ஆகிய மூன்று இல்லங்களுக்கிடையே போட்டிகள் நடாத்தப்படுகின்றது.
   .மெய்வல்லுநர் மற்றும் பெருவிளையாட்டுக்களில் பாடசாலை மட்டப்போட்டிகள் நடைபெறுவதுடன், கோட்டமட்டம்,வலயமட்டம், மாகாணமட்டம் வரையான பங்குபற்றலும் ஊக்குவிக்கப்படுகின்றது.
2. மாணவர் மன்றங்கள் அமைக்கப்பட்டு வாரந்தோறும் வெள்ளிக்கிழமை இறுதிப்பாடவேளை ஒன்றுகூடல்கள் நடாத்தப்படுகின்றது.

   * .தமிழ்ச்சங்கம்
   * **கணித விஞ்ஞான மன்றம்**
   * **கவின்கலை மன்றம்**
   * **சமூக விஞ்ஞான மன்றம்**
   * பாடசாலை சுகாதாரக் கழகம்
   * **ஆரம்பப்பிரிவு மாணவர் மன்றம்**
   * **ஆங்கில மன்றம்** ஆகியன எமது பாடசாலையில் செயற்படுகின்றன.இவை ஒவ்வொன்றுக்கும் துறைசார்ந்த ஆசிரியர்கள் பொறுப்பாகச் செயற்படுகின்றனர்.

3. வருடாந்தம் பரிசளிப்பு விழா நடாத்துவதும் கடந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.இவ் ஆண்டு தமிழ்மொழித்தின விழா கடந்த மே மாதத்தில் நடாத்தப்பட்டது.ஒவ்வோராண்டும் தமிழ் மொழித்தினப் போட்டிகள் பாடசாலை மட்டத்தில் நடாத்தப்படுவதுடன்,தமிழ்மொழித்தின விழாவும் வருடாந்தம் நடாத்தப்படவேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.அத்துடன் ஆங்கில மொழித்தினத்தையும் வருடாந்தம் நடாத்த வேண்டுமென்பது எனது விருப்பமாகும்.எதிர்வரும் ஆண்டுகளில்அது சாத்தியமாகும் என்றே நம்புகின்றோம்.நவராத்திரி தினத்தை ஒட்டிய கலைமகள் விழா வருடாந்தம் நடைபெறுகின்றது.இவ்வாறான விழாக்களின் போது மாணவர்கள் பல்வேறு ஆற்றல்களுக்கு முழுமையாக இடமளிக்கப்படுகின்றது.

மேலும் பலவேறு போட்டிகளிலும் மாணவர்கள் பங்கு கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.தமிழ் மொழித்தினப் போட்டிகள்,ஆங்கில தினப்போட்டிகள், அழகியல் போட்டிகள் சமூகவிஞ்ஞானப் போட்டிகள் ஆகியவற்றில் பாடசாலை மட்டத்தில் சகலரும் பங்பற்றுவதுடன் கோட்ட,வலய மட்டங்களிலும் பங்குபற்றி வருகின்றனர்.போட்டிகளில் ஒவ்வொரு மட்டத்திலும் மாணவர் பெற்ற வெற்றிகள் தொடர்பான பதிவுகள் பாடசாலையில் முறையாகப் பேணப்படுவதுடன்,அதறகான பரிசில்களும் விழாக்களின் போது வழங்கிஊக்குவிக்கப்படுகின்றது.இத்துறையின் மதிப்பீட்டாளராக திரு.க.கிருபாகரன் செயற்படுகின்றார். செயற்பாட்டுக் குழுவினராக திரு.க.கிருபாகரன் திரு.இ.இளங்கோ திருமதி.கீ.சாந்தினி திருமதி ஜ.பிரபாகரன் ஆகியோர் செயற்படுகின்றனர்.

5ஆவது பண்புத்தரம்:

## மாணவர்களின் அடைவு மட்டம்

## Student s Achivements

1.ஆரம்பப்பிரிவில் அத்தியாவசிய கற்றல்தேர்ச்சிகளில் மாணவர் அடைவு நிலை-2010-2011

| | தரம் 1,2-முதன்மைநிலை-1 அ.தே.40இல் தேர்ச்சி அடைந்துள்ள மாணவர் விகிதம் | | | தரம் 3,4-முதன்மைநிலை-2 அ.தே.52இல் தேர்ச்சி அடைந்துள்ள மாணவர் விகிதம் | | | தரம் 5-முதன்மைநிலை-3 அ.தே 55 இல் தேர்ச்சி அடைந்துள்ள மாணவர் விகிதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருடம் | 40-32 | 31-20 | 20ற்கு கீழ் | 52-42 | 41-26 | 26ற்கு கீழ் | 55-44 | 43-28 | 28ற்கு கீழ் |
| 2010 | 20 % | 50 % | 30 % | 30 % | 60 % | 10 % | 60 % | 20 % | 20 % |
| 2011 | 25 % | 45 % | 30 % | 25 % | 65 % | 10 % | 55 % | 30 % | 15 % |

2. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள்:

| வருடம் | தோற்றியோர் | 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் | 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் |
|---|---|---|---|
| 2010 | 13 | 03 | 04 |
| 2011 | 20 | 04 | 02 |
| 2012 | 22 | 12 | 04 |

- 2012 இல் 171 புள்ளிகளைப் பெற்று பதின்மூன்று ஆண்டுகளின் பின் புலமைப்பரிசில் பெறும் வாய்ப்பினை ஒரு மாணவன் பெற்றுள்ளான்.

3. தரம் 9- மாகாண மட்டத்திலான பரீட்சைப் பெறுபேறுகள்:

| வருடம் → | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|
| தோற்றியோர் → | 11 | 16 | 22 |
| பாடங்கள் ↓ | | | |
| தமிழ்மொழி | 84% | 80% | 100% |
| சைவநெறி | 88% | 73% | 79% |
| கணிதம் | 46% | 40% | 14% |
| விஞ்ஞானம் | 46% | 40% | 42% |
| வரலாறு | 72% | 40% | 100% |
| ஆங்கிலம் | 25% | 13% | 72% |
| புவியியல் | 73% | 47% | 42% |
| குடியுரிமைக்கல்வி | 73% | 73% | 100% |
| தொழில்நுட்பத்திறன் | 65% | 70% | 75% |
| சித்திரக்கலை | 80% | 100% | 100% |
| சங்கீதம் | 81% | 77% | 100% |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 85% | 47% | 100% |

இப் பெறுபேறுகளை இவ்வாண்டில் அதிகரிக்கச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது.

4. க.பொ.த சா.தர பரீட்சை பெறுபேறுகள்-:

கடந்த ஆண்டின் க.பொ.த சா/தர பெறுபேறுகளைப் பொறுத்த மட்டில் சிறப்பான அம்சங்கள் பல வெளிப்படுத்தப்பட்டன.

- 8A , 7A 1C 1S,6A 2C, 4A 1B 3C ஆகிய உயர் சித்திகள் பெற்றும் முறையே ஒவ்வொருவர் சித்தி பெற்றனர்.
- ஆங்கில பாடத்தில் நீண்டகால இடைவெளியின் பின் ஒருவர் சித்தி பெற்றமை.
- கணிதத்துறை,உயிரியல் விஞ்ஞானத்துறையை உயர்தரத்தில் கற்றுக்கொள்ள முறையே ஒவ்வொருவர் தெரிவு செய்தமை.
- கலைத்துறையில் 13 மாணவர்கள் கற்று வருகின்றமை ஆகியன சிறப்பம்சங்களாகும். எனினும் கணிதபாடத்தில் 36% மாக ஏற்பட்ட சித்தி வீதமானது உயர்தரம் கற்பதற்கான தகமை பெற்றோரின் எண்ணிக்கையை வீழ்ச்சியடையச் செய்துவிட்டது. இவ்வாண்டில் இப் பரீட்சையின் பெறுபேறுகளை அதிகரிக்க விசேட வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

| இல | பாடங்கள் | 2010 சித்தி வீதம் | 2011 சித்தி வீதம் |
|---|---|---|---|
| 01 | தமிழ் மொழி | 87% | 86% |
| 02 | சைவநெறி | 100% | 100% |
| 03 | கணிதம் | 93% | 36% |
| 04 | விஞ்ஞானம் | 47% | 73% |
| 05 | ஆங்கிலம் | - | 05% |
| 06 | வரலாறு | 100% | 82% |
| 07 | புவியியல் | 47% | 25% |
| 08 | வர்த்தகமும் கணக்கியலும் | - | 100% |
| 09 | குடியுரிமைக்கல்வி | - | 58% |
| 10 | சங்கீதம் | 100% | 75% |
| 11 | சித்திரம் | 100% | 100% |
| 12 | தகவல் தொடர்பாடல் தொ.நுட்பம் | - | 100% |

- மாணவர்அடைவினை மேம்படுத்த பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

  1. மேலதிக வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றது.
  2விசேட பயிற்சிகள் செயற்படுத்தப்படுகின்றது.
  3. பெற்றோர் சந்திப்புக்களை ஏற்படுத்தி மாணவர்வரவு,வீட்டில் கற்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்தல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு வருகின்றது.
  4. வீட்டு வேலைகள் வழங்கப்பட்டு தினமும் மதிப்பீடு செய்யப்படுகின்றது.

- இத்துறையின் மதிப்பீட்டாளராக திரு.சு. இந்திரகுமார் அவர்களும்,
- செயற்பாட்டுக் குழுவினராக திரு.சு.இந்திரகுமார்
  திரு.பொ.பரஞ்சோதி
  திரு.ந.சிவாகரன்,
  திரு.இ.இளங்கோ
  ஆகியோரும் செயற்படுகின்றனர்.

6 வது பண்புத்தரம் :

## மாணவர் நலன்புரிச் சேவைகள்
## Student's Welfare Services

மாணவர் நலன் சார்ந்த விடயங்களில் கவனஞ் செலுத்துதலும், அதனை விருத்தியாக்கலும் இத் துறைசார்ந்ததாகும். எமது பாடசாலையில் மாணவர் நலன் சார்ந்த வசதிகளை ஏற்படுத்துவதில் நாம் மிகுந்த கவனத்தைச் செலுத்தி வருகின்றோம்.

- வழிகாட்டல் ஆலோசனைக்கான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதற்கென ஆசிரியர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்,வளவாளர் மூலமும் ஆலோசனை வழங்கற் செயற்பாடு நடைபெற்று வருகின்றது.
- மாணவர் சேமிப்பினை ஊக்குவிப்பதற்கான வங்கிச்சேவை வசதிகள் மாதாந்தம் வழங்கப்படுகின்றது.மாதாந்தம் சேமிப்புச் செய்வோர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.
- மாணவர்களின் சுகாதாரம் ,நோய்த்தவிர்ப்பு, தொற்று நோய்கள் தொடர்பான அறிவுறுத்தல்கள் சுகாதாரப் பரிசோதகர் மூலம் மாணவர்களுக்கும்,பெற்றோர் சந்திப்புக்களின் போதும் தவணைக்கொரு தடவை வழங்கப்படுகின்றது.
- மலசல கூடங்கள் தினமும் பாவனைக்கேற்ற நிலையில் தூய்மைப்படுத்தப்பட்ட நிலையில் பேணப்பட்டு வருகின்றது.அதற்கான திட்டமிட்ட ஒழுங்குமுறை எமது பாடசாலையில் பேணப்படுகின்றது.
- பாடசாலைச் சூழலில் நுளம்புகள் பெருகாதவாறு துப்பரவாக்கும் பணிகள் நாளாந்தம் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றது.
- குடிநீர் வசதிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளது,மேலும் மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது.

இத்துறை சார்ந்த ஏனைய விடயங்களையும் மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை மேற்கொளவதில் இத் துறைசாரந்த குழுவினர் செயற்பட்டுவருகின்றனர்.

இத்துறையின் மதிப்பீட்டாளராக திருமதி ஜ..பிரபாகரன் செயற்படுகின்றார்.

செயற்பாட்டுக் குழுவினர்: திருமதி.ஜ.பிரபாகரன்
திருமதி.ஜெ.ஜெமல்டா
திரு.து.சயந்தன்
திரு.க.கிருபாகரன்

7 வது பண்புத்தரம் :

## பாடசாலையும் சமூகமும்
## School & Community

பாடசாலைக்கும் சமூகத்திற்குமான உறவினை வலுப்படுத்துவதில் நாம் பலவேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.எமது பாடசாலையைப் பொறுத்த வரையில் தனித்துவமான இப்பிரதேசத்தைச் சார்ந்த அனைத்துப் பெற்றோர்களும் இப்பாடசாலையின் பழையமாணவர்கள் என்ற வகையில் அனைவருமே இப்பாடசாலையுடன் தொடர்புடையவர்களே. மாணவர்களின் முன்னேற்றம் தொடர்பாகவும்,பாடசாலையின் மேம்பாடு தொடர்பாகவும் நாம் பெற்றோர்களுடனும்,பழைய மாணவர்களுடனும் நாம் நெருங்கிய தொடர்புகளைப் பேணிவருகின்றோம்.

- பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ,பழைய மாணவர் சங்கம் ,பாடசாலை அபிவிருத்திக்குழு என்பன அமைக்கப்பட்டு செயற்பட்டுவருகின்றது.

- பாடசாலையின் பௌதீக வள விருத்திக்கான உதவிகள் பல கடந்த காலங்களில் பாடசாலைச் சமூகத்தினரால் வழங்கப்பட்டுள்ளது.வெளி நாடுகளில் உள்ளவர்களாலும் ,உள்நாட்டில் உள்ளவர்களாலும் இத்தகைய உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் வசதிகளை விருத்தியாக்கவும் தற்போதிய அவசிய தேவைகளுக்காகவும் பாடசாலைச் சமூகத்தின் உதவிகளை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

- வகுப்பு மட்டத்தில் தவணைக்கொரு தடவை பெற்றோர் சந்திப்புக்கள் நடைபெற்று வருகின்றது.ஒவ்.வொரு வாரமும் பெற்றோர் அதிபர் ஆசிரியர்களைச் சந்திப்பதற்கு சந்தர்ப்பமளிக்கப்பட்டுள்ளது.

- பெற்றோர் பழைய மாணவர்களிடமிருந்து தகவல் பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஆலோசனைப்பெட்டி (Suggestion box) பயன்படுத்தப்படுகின்றது.பாடசாலை அபிவிருத்தித் திட்டம் தயாரித்தலில் பெற்றோர்,பழையமாணவர்கள் பங்கு கொள்கின்றனர்.

மேலும் இத் துறையில் மேம்படுத்த வேண்டிய சுட்டிகள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றோம்.
பாடசாலை சமூக நிறுவனமென்ற வகையில் சமூகத்துடன் பரஸ்பர உறவினை தொடர்ச்சியாக பேணிவரவேண்டியது அதன் பணி நோக்கிலும் அபிவிருத்தி நோக்கிலும் மிகவும் இன்றியமையாததாகும்.எமது பாடசாலையும் சமூகத்துடன் அத்தகைய தொடர்பினை பேணுவதற்காக மிகுந்த பிரயத்தனத்துடன் முயன்று வருகின்றது.மாணவர்களின் கல்வித் தேவைகள் தொடர்பாக அனைத்துப் பெற்றோர்களையும் பாடசாலையின் பக்கம் ஈர்த்துக் கொள்வதற்கு நாம் முயற்சித்து வருகின்றோம்.மேலும் எமது பாடசாலையின் பழைய மாணவர்கள் அனைவரையும் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வசிப்பவர்கள் அனைவரையும் எமது பாடசாலையின் அபிவிருத்தியின் பங்காளிகளாக இணைத்துக் கொள்ள முயற்சிக்கின்றோம்.அன்பார்ந்த பெற்றோர்களே,பழைய மாணவர்களே எமது பாடசாலை எமது கிராமத்தின் தனித்துவத்தை காக்கும் கல்வி நிறுவனமாக தொடர்ந்து வளர வேண்டும்.பெற்றோர்களே பிள்ளைகளின் கல்வியில் மிகுந்த கவனம் செலுத்துங்கள்.அது தொடர்பாக பாடசாலையுடன் நெருங்கிய தொடர்பினைப் பேணுங்கள்.பழைய மாணவர்களே நீங்கள் எங்கிருந்தாலும் உங்கள் பாடசாலையின் முன்னேற்றத்திலும்,வளர்ச்சியிலும் எப்போதும்அக்கறை கொண்டவர்களாக இருங்கள்.கூட்டங்களிலும்,நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு பாடசாலையின் வளர்ச்சியில் தாங்களும் பங்காளிகளாகுமாறு அனைவரையும் அன்புடன்அழைத்து நிற்கின்றேன்.

இத்துறையின் மதிப்பீட்டாளராக திருமதி ச.தவக்குமார் செயற்படுகின்றார்.
செயற்பாட்டுக் குழுவினராக திருமதி ச.தவக்குமார்
திரு.க.கிருபாகரன்
திரு.பொ.பரஞ்சோதி ஆகியோர் செயற்படுகின்றனர்.

8ஆவது பண்புத்தரம்: அறிவை அடிப்படையாகக் கொண்ட சமூகத்திற்காக மாணவர் அபிவிருத்தி

**Student s' Devolopment for Knowledge Based Society**

- ❖ சமய விழுமியங்களை அடிப்படையாகக் கொண்ட சுய ஒழுக்கத்தை பேண வழிப்படுத்தப்படல்.
- ❖ நற்பண்புகளை விருத்தியாக்கும் அறிவுரைகளை தினமும் காலைக் கூட்டத்தில் வழங்குதல்.
- ❖ நல்ல சுகாதாரப் பழக்கவழக்கங்களை பின்பற்ற வழிப்படுத்தல்.உதாரணமாக தினமும் பாடசாலையில் கைகளை முறையாகக் கழுவிக்கொண்டபின் உணவருந்த வழிப்படுத்தல்.
- ❖ சுற்றாடற் பராமரிப்பிலும் பாதுகாப்பிலும் ஈடுபடத்தூண்டுதல்.
- ❖ கணினி அறிவை அனைத்து மாணவருக்கும் பெற்றுக் கொடுக்க வழிப்படுத்தல். வாராந்தம் பாடவேளை ஒதுக்கப்பட்டு கணினிக்கற்கை வசதி சகலருக்கும் செய்யப்பட்டுள்ளது.
- ❖ விளையாட்டு மற்றும் அழகியற் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் ஏனையவர்களை மதிக்கும் சந்தர்ப்பங்கள் பெற்றுக்கொடுக்கப்படுகின்றது.
- ❖ ஆங்கிலத்தை தொடர்பாடல் மொழியாகப் பயன்படுத்துவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.ஒவ்வொரு புதன்கிழமையும் காலைக்கூட்டத்தில் மாணவர்களால் ஆங்கிலத் தொடர்பாடல் நிகழ்வுகள் நடாத்தப்படுகின்றது.
- ❖ தமிழ் மொழித்திறனை மேம்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை மேம்படுத்தவும் முயற்சிக்கப்படுகின்றது.
- ❖ மேலும் இத்துறைசார்ந்த விடயங்கள் பலவற்றை மேம்படுத்த வேண்டியுள்ளது. அது தொடர்பாக துறைசார் குழுவினர் முயற்சிகளை எடுத்து வருகின்றனர்.

இத்துறைசார் மதிப்பீட்டாளர்: திரு.து. ஜீவானந்தன்
செயற்பாட்டுக் குழுவினர்: திருமதி ந.வித்யா
திரு.து.ஜீவானந்தன்
திரு.இ.இளங்கோ ஆகியோர் செயற்படுகின்றனர்.

இவ்வாறாக எமது பாடசாலையின் பண்பு சார் தரத்தினை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு துறையிலும் நாம் விசேட கவனத்தைச் செலுத்தி வருகின்றோம். ஒவ்வொரு துறைசார்ந்தோரும் மாதாந்தம் ஒன்றுகூடி மேம்படுத்த வேண்டிய அம்சங்களை இனங்கண்டு அவற்றை மேம்படுத்தும் வழிமுறைகள் தொடர்ந்து தொடர்ச்சியாகச் செயற்பட்டுவருகின்றனர்..பண்புசார் தரத்தில் உயர்ந்த மட்டத்தினை நிலைக்கத்தக்க வகையில் தொடர்ச்சியாக பேணி வரும் நிலை எமது பாடசாலையில் உருவாக வேண்டும்.அதற்காகத் தொடர்ந்து நாம் முயல்வோம்.

# எமது பாடசாலையில் பிள்ளை நேயப்பாடசாலை வேலைத்திட்டம்

# CHILD FRIENDLY SCHOOL PROJECT IN OUR SCHOOL

எமது பாடசாலை கடந்த 2010 ஆம் ஆண்டு முதலாக பிள்ளை நேயப்பாடசாலை வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக வலயக்கல்வித்திணைக்களத்தினால் தெரிவுசெய்யப்பட்டு யுனிசெவ் உதவித்திட்டத்துள் உள்வாங்கப்பட்டது. தற்போது கல்வி அமைச்சு சகல பாடசாலைகளும் பிள்ளைநேயப்பாடசாலைகளாக செயற்படவேண்டுமென்பதை வலுப்படுத்தி நிற்கும் நிலையில் நாமும் எமது பாடசாலையை பிள்ளை நேயப் பாடசாலையாக வளர்த்துச் செல்வதற்கான செயற்பாடுகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றோம்.

பிள்ளை நேயப்பாடசாலையின் ஆறு பிரதான பிரமாணங்களையும் எமது பாடசாலையில் சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை கடந்த இரண்டு வருடங்களாக முன்னெடுத்து வருகின்றோம்.நிதிவசதிகள் போது மானதாக இல்லாத நிலையிலும் எம்மால் முடிந்த அளவுக்கு இவற்றை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

1. உரிமைகளை அடிப்படையாகக் கொண்டு உயிரோட்டமான பங்களிப்பு
2. ஆண்,பெண் சமூகவியல்களுக்கேற்ப துலங்குதல்
3. பிள்ளைகளிடத்தே தரமான கற்றற் பேறுகளை விருத்தியாக்கல்
4. பிள்ளைகளின் சுகாதாரம்,பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்தல்.
5. பிள்ளைகள் அவர்களது குடும்பங்கள்,சமூகம் ஆகியோரின் செயல்ரீதியான பங்களிப்பு.
6. அரச கொள்கைகள் முழுமையான அமுலாக்கம்

ஆகிய பிரதான பிரமாணங்கள் ஆறினையும் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற பாடசாலைகள் பிள்ளை நேயப் பாடசாலைகளாகும் என்ற வகையில் இப்பிரதான பிரமாணங்களை எமது பாடசாலையில் செயற்படுத்தவும்,மேம்படுத்தவும் ஆசிரிய குழுக்கள் உருவாக்கப்பட்டு சுயமதிப்பீடு செய்யப்பட்டு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது.சுயமதிப்பீடு மேற்கொள்ளும் போது பெற்றோர்கள்,பழைய மாணவர்கள்,பாடசாலை மாணவர்கள்,ஆசிரியர்கள் ஆகியோர் தனித் தனிக் குழுக்களாகச் செயற்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளவை,மேற்கொள்ள வேண்டியவை பற்றிய முன்மொழிவுகளை முன்வைத்துக் கலந்துரையாடி மேற்கொள்ள வேண்டியவற்றை முன்னுரிமைப்படுத்தி அபிவிருத்தித்திட்டம் தயாரிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு பிரமாணத்தையும் முறையாக நிறைவேற்றுவதற்காக ஆசிரிய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.இக்குழுக்கள் தத்தமது பிரமாணங்களுக்குரிய நியமங்கள் நிறைவேற்றப்படுவதில் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

முதலாவது பிரமாணம்:

## உரிமைகளை அடிப்படையாகக் கொண்டு உயிரோட்டமான வகையில் உட்படுத்தல்

செயற்பாடு:1

1. மாணவர் வரவினை உயர்ந்த மட்டத்தில் பேணுதல் -

நாளாந்த மாணவர் வரவினை உயர்ந்த மட்டத்தில் அதாவது 100%த்தை அண்மித்தாக பேனுவதற்கு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம்.வரவு ஒழுங்கீனமான மாணவர் தொடர்பாக கவனம் செலுத்தி ஆராயப்படுகின்றது.இதன் விளைவாக எமது மாணவர்வரவு பின்வருமாறு அமைந்துள்ளதுடன் மாதாந்த வரவுச்சராசரி 90% மாகவும் அமைந்துள்ளது.

| மாதங்கள் | வரவுச்சராசரி | மாதங்கள் | வரவுச்சராசரி |
|---|---|---|---|
| ஜனவரி | **89.4%** | .மே | **91.2%** |
| பெப்ரவரி | **90.0%** | யூன் | **89.8%** |
| மார்ச் | **90.5%** | யூலை | **90.0%** |
| ஏப்ரல் | **91.29%** | ஆகஸ்ட் | **100%** |

செயற்பாடு:2 2. இடைவிலகலை முற்றாகத் தடுத்தல் -

எமது பாடசாலையில் மாணவர் இடைவிலகல் மிக்குறைந்த மட்டத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.வரவு ஒழுங்கீனமான,இடைவிலகத்தக்க பிள்ளைகள் இனங்காணப்பட்டு ஊக்குவிப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.கடந்த ஆண்டில் தரம் 10 இலிருந்து இருவர் இடைவிலகிக் கொண்டனர்.அவர்களுள் ஒருவர் ஆஸ்மா நோய் காரணமாகவும் மற்றையவர் ஒழுங்கற்ற வரவு,வீட்டில் கட்டுப்படாமை காரணமாகவும் வயது முதிர்வு காரணமாகவும் விலகிக்கொண்டார்.இவ்வாண்டில் தரம் 11 இலிருந்து ஒரு மாணவன் மாத்திரம் விலகிக் கொண்டார்.வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து வந்து சேர்ந்தவர்,வரவு ஒழுங்கீனம்,எழுத்தறிவில் பின்னடைவு என்பன காரணமாக பொதுப்பரீட்சையில் தோற்றமுடியாத நிலையில் இடைவிலகியுள்ளார்.இது தவிர இடைவிலகல் முற்றாகத்தடுக்கப்பட்டுள்ளது.

செயற்பாடு:03 மாணவரகளின் கருத்துக்களை அறியவும்,சமூகத்தின் ஆலோசனைகளை அறியவும் பாடசாலையில் ஆலோசனைப் பெட்டி முறைமை நடைமுறைப்படுத்தப்படுகின்றது.மாணவர்கள் தமது கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர்.அக் கருத்துக்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படுகின்றது.இம்முதலாவது பிரமாணத்தினை நிறைவாக நிறைவேற்றுவதில் பாடசாலை வரவுக்குழுஅமைக்கப்பட்டு செயற்படுத்தப்படுவதுடன்,

**அதிபர்,திரு.து.ஜீவானந்தன்,திருமதி.ச.தவக்குமார்,திரு.மு.பேரின்பமூர்த்தி, திரு.ந.சிவாகரன் , திரு.க.கிருபாகரன்** ஆகியோர் கொண்ட ஆசிரியர் குழுவும் செயற்பட்டுவருகின்றது.

இரண்டாவது பிரமாணம்:

**ஆண்,பெண் சமூகவியல்களுக்கேற்ப துலங்குதல்**

அனைத்துச் செயற்பாடுகளிலும் ஆண் பெண் இருபாலாருக்கும் சமவாய்ப்பு வழங்கப்படுதுடன் ஆண் பெண் சமூகவியல்புகளிலும் கவனம் செலுத்தப்படுகின்றது.1பாடசாலை நிகழ்வுகள் அனைத்திலும் இருபாலாருக்கும் சமவாய்ப்பு வழங்கப்படுகின்றது.

1. பால்வேறுபாடுகளுக்கமைய பெருவிளையாட்டுப் பயிற்சிகள் வழங்கவும்,இருபாலாருக்கும் பெருவிளையாட்டுக்களில் பங்குபற்றுவதற்கும் வாய்ப்புக்கள் வழங்குவதற்கு முயற்சிக்கப்படுகின்றது.பொருத்தமான ஆசிரியரின்மை,பயிற்றுனர்களைப் பெற்றுக் கொள்வதிலுள்ள தடங்கல்கள் தடையாகவுள்ளது.
2. பாடசாலை வழங்களை பால்வேறுபாடின்றி இருபாலாரும் பயன்படுத்துவதற்கு பூரண சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.
3. ஆண் பெண் மலசல கூடங்கள் உரியவசதிகளுடன் தினமும் சுத்தமாகப் பேணப்படுகின்றது.
   இவ்வாறாக பிள்ளை நேயப் பாடசாலைக்குரிய இரண்டாவது பிரமாணமாகிய பால் சமத்துவம் பேணும்நிலை நிறைவேற்றப்படுகின்றது.இதைப்பேணுவதற்கும்,மேலும் நிறைவாக மேம்படுத்துவதற்குமாக
   **திரு.சு.இந்திரகுமார்,திருமதி.ஜ.பிரபாகரன்,திருமதி.ந.வித்யா**
   **திருமதி.ஜெ.ஜெமல்டா,திரு.து.ஜீவானந்தன்** ஆகிய ஆசிரியர் குழு செயற்படுகின்றது.

மூன்றாவது பிரமாணம்:

**பிள்ளைகளிடத்தே தரமான கற்றற் பேறுகளை விருத்தியாக்கல்.**

எமது பணிக்கூற்றுடன் இணைந்ததும்,பிள்ளை நேயப்பாடசாலையின் பிரதான பிரமாணமுமாகிய இதனை விருத்தியாக்கும் வகையில் பௌதீக வளத்திலும்,மனித வளத்திலும் மாற்றங்களை ஏற்படுத்துவதுடன்,மாணவர்,ஆசிரியர் செயற்பாட்டிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகின்றது.

1. வகுப்பறை வசதிகளை ஏற்படுத்தல்
2. வகுப்பறைகளில் கற்றலுக்கான கவிநிலையை / கற்றற் சூழலை ஏற்படுத்துதல்
3. கற்றல் கற்பித்தல் திறனை மேம்படுத்தல்
4. ஆசிரியர்களின் வாண்மைத்துவத்தை மேம்படுத்தல்
5. வினைத்திறன் மிக்க கற்றல்,கற்பித்தல்,கணிப்பிடல் செயற்பாடுகளை மேற்கொள்ளல்
6. ஆசிரியரின் மாதாந்த வரவு வீதத்தினை மிக உயர்வாகப் பேணுதல்
7. கற்றல்வளங்களை முறையாகப் பயன்படுத்துதல்
   ஆகிய நடவடிக்கைகள் மூலம் சிறந்த கற்றற் பேறுகளைப் பிள்ளைகளிடத்தே விருத்தியாக்குவதற்கு முனைய வேண்டியுள்ளது.

1. **வகுப்பறை வசதிகளை ஏற்படுத்துதல்:**

எங்கள் பாடசாலையின் பிரதான பிரச்சினையாக வகுப்பறை நெருக்கடியே நிலவுகின்றது.ஆரம்பப்பிரிவிலும், இடைநிலைப்பிரிவிலும் வகுப்பறைக்கான நெருக்கடி நிலவுகின்றது.இடைநிலைப்பிரிவில் நான்கு வகுப்பறைகளை மிக நெருக்கமாக இப் பிரதான மண்டபத்தில் நடாத்தி வருகின்றோம்.அதே போல் ஆரம்பப்பிரிவிலும் நெருக்கடி நிலவியது அதனைச் சீர்செய்யும் வகையில் சைக்கள் தரிப்பிடத்தினை வகுப்பறையாக மாற்றியமைத்து தரம் 3 வகுப்பினை நடாத்துகின்றோம்.புதிய வகுப்பறைக்கட்டடத் தொகுதியொன்றை அமைக்கும் போதே இப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வினைக்காணமுடியும். அதற்கான கோரிக்கையினை கடந்த வருடம் முதலாக திணைக்களத்திடம் விடுத்துவருகின்றோம்.

ஏனைய விடயங்கள் தொடர்பாக மேம்படுத்தல்களை மேற்கொண்டு வருகின்றோம்.உயர்ந்த கற்றற் பேறுகளை விருத்தியாக்குவதில் தொடர்ச்சியான எமது முயற்சிகள் தொடரும் என்பதனை இவ்வேளையில் உறுதியாகத' தெரிவித்து நிற்கின்றோம்.

2. **எழுத்தறிவூட்டல் வேலைத்திட்டம்:**
எழுத்தறிவில் பின்னடைவாகவுள்ள ஆரம்பக்கல்வி மாணவர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு எழுத்தறிவினை ஏற்படுத்தும் வகையில் யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் இவ்வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.தரம் 3,4,5 களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 25 மாணவர்கள் இதில் பங்கு பற்றுகின்றனர்.இதற்கென ஆசிரியராக செல்வி தெ.ஜீவிதா நியமிக்கப்பட்டுள்ளார்.இவ்வேலைத்திட்டத்தின் மூலம் எழுத்தறிவில் பின்னடைவான ஆரம்பப்பிரிவு மாணவர்களின் நிலை மேம்படுமென எதிர்பார்கின்றோம்.
3. **அத்தியாவசிய கற்றற தேர்ச்சிகள்:**
அத்தியாவசியக் கற்றற் தேர்ச்சியினை ஆரம்பக்கல்வி நிலைகளிலுள்ள அனைத்து மாணவர்களும் அடைந்து கொள்ளச் செய்வதற்கான வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.அனைத்து மாணவர்களும் அத்தியாவசியக் கற்றற் தேர்ச்சியினை அடைந்து கொள்ளச் செய்வது ஒவ்வொரு ஆரம்பக்கல்வி ஆசியரதும் முழுமையான பொறுப்பாகும்.

நான்காவது பிரமாணம்: **பிள்ளைகளின் ஆரோக்கியத்தையும், பாதுகாப்பையும், கவனிப்பையும் உறுதிப்படுத்தல்**

மாணவர்களின் ஆரோக்கியம்,பாதுகாப்புத் தொடர்பாக எமது பாடசாலை மிகவும் கவனமாகச் செயற்பட்டு வருகின்றது.அந்த வகையில் பல்வேறு வேலைத்திட்டங்கள் எமது பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

1. பாடசாலைச் சுற்றுப்புறத்தை எப்போதும் சுத்தமாக வைத்திருப்பதற்கான திட்டமிட்ட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.
2. .இலை,குழை,கடதாசி மற்றும் பொலித்தீன் கழிவுகளை வேறுவேறாக வெளியேற்றுவதற்கான விசேட ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. .இலை,குழைக் கழிவுகளைப் பயன்படுத்தி கூட்டெரு தயாரிக்கும் செயற்திட்டம் நடைமுறை படுத்தபடுகின்றது.
3. மலசல கூடங்களை எப்போதும் தூய்மையாகப் பேனுவதற்கான நடைமுறை அமுல்படுத்தப்படுகின்றது.
4. குடிநீர்வசதி போதுமானதாகச் செய்யப்பட்டுள்ளது.சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்காக நீர்த்தாங்கி சுத்தம் செய்தல் கிரமமாக

மேற்கொள்ளப்படுகின்றது.மேலும் குடிநீர் வழங்கும் செயற்பாட்டினை மேம்படுத்த எச்.என்.பி அசூரன்ஸ் நிறுவனம் எமக்கு உதவமுன்வந்துள்ளது.அவர்களின் உதவியுடன் பாடசாலைக் குடிநீர் வழங்கும் செயற்பாடு மேலும் மேம்படுத்தப்படவுள்ளது.அதற்காக எமது நன்றிகளை அவர்களுக்குத் தெரிவித்து நிற்கின்றோம்.

5. உணவு,போசாக்கு மிக்கதாக தனமும் வழங்கப்படுகின்றது.தற்போது முட்டை வழங்கும் வேலைத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.வாரத்தில் நான்கு நாட்கள் மதிய உணவுடன் முட்டை வழங்கப்படுகின்றது.
6. டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டமும் சிறப்பாகச் செயற்படுத்தப்படுகின்றது.வாரத்தில் ஒரு நாள் சுற்றுச் சூழல் துப்பரவு மதிப்பீடு செய்யப்படுகின்றது.
7. பாடசாலைச்சூழல் எப்போதும் பாதுகாப்பானதாகப் பேணப்படுகின்றது.ஆபத்தை ஏற்படுத்தத்தக்க எத்தகைய நிலைமைகளும் அடிக்கடி அவதானிக்கப்பட்டுச் சீர் செய்யப்படுகின்றது.
8. அனர்த்தப்பாதுகாப்பிற்கான முன்திட்டம் பற்றிய பயிற்சிகள் வழங்கப்படுகின்றது.எமது பகுதிகளில், பாடசாலைச் சூழலில் ஏற்படக்கூடிய அனர்த்த நிகழ்வுகள் (Hazard) தொடர்பாகவும் அவை ஏற்படக்கூடிய காலம் தொடர்பாகவும்,பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும் அறிவுறுத்தல்கள் வழங்ப்பட்டுள்ளது.
9. பாடசாலை முதலுதவிப்பெட்டி வசதி வழங்கப்பட்டுள்ளது.மாணவர்களுக்கு முதலுதவிப்பயிற்சிகள் வழங்க வேண்டியுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.இவற்றை மேலும் வலுப்படுத்தும் வகையிலும்,மேலும் எமது மாணவர்களின் நலன்புரிச் சேவைகளை மேம்படுத்துவதிலும்,பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையிலும் செயற்குழு செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்கள் திரு.சி.ரவிச்சந்திரன் திரு.பொ.பரம்சோதி
திருமதி.ச.தவக்குமார் திருமதி.ஜெ.ஜெமல்டா
திருமதி.கீ.சாந்தினி

## ஐந்தாவது பிரமாணம்: பிள்ளைகள் அவர்களது குடும்பங்கள் ,சமூகம் ஆகியோரின் செயல்ரீதியான பங்களிப்பு

பாடசாலையின் உயிரோட்டமான இயக்கத்திற்கும்,வளர்ச்சிக்கும் பாடசாலைச் சமூகத்தின் உயிரோட்டமான பங்களிப்பும்,ஆதரவும் இன்றியமையாததாகும்.எமது பாடசாலை அமைந்துள்ள கிராமத்தைப் பொறுத்தவரையில் இது தனித்துவமான இயல்புகளைக் கொண்டதாகும்.இப்பாடசாலையில் கற்கும் பிள்ளைகளின் பெற்றோர்கள் அனைவரும் இப்பாடசாலையின் பழைய மாணவர்களாவர்.அந்த வகையில் பெற்றோர்கள்,பழையமாணவர்கள் அனைவரும் பாடசாலையுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருக்கின்றனர்.

- மாதாந்தம் பெற்றார் சந்திப்புக்களை வகுப்பு ரீதியாக நடாத்துவதற்கு நாம் திட்டமிட்ட போதும் தவணைக்கொரு தடவையாவது பெற்றார் சந்திப்புக்கள் நடைபெற்று வருகின்றது.
- மதிய உணவு வேலைத்திட்டத்தை சிறப்பாக நடாத்துவதற்கு பெற்றாரின் பங்களிப்பு கிடைத்து வருகின்றது.வாரத்தில் ஐந்து நாட்களும் பெற்றார் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.அவர்கள் தினமும் வருகை தந்து தினமும் சமையலாருக்கு உதவி செய்துவருகின்றனர்.

- ❖ மாணவர்களின் கற்றல் கற்பித்தல் தொடர்பாக கணிசமான பெற்றார் வருகைதந்து ஆசிரியர்களுடன் கலந்துரையாடுகின்றனர்.

- ❖ பாடசாலை விழாக்களுக்கு கணிசமான பெற்றார் சமூகமளிக்கின்றனர்.

- ❖ பாடசாலையின் பௌதீக வளவிருத்திக்கு கடந்த காலங்களில் பல பெற்றார்கள், பழைய மாணவர்கள் உதவி வழங்கியுள்ளனர்.தொடர்ந்தும் பெற்றார்கள் பழைய மாணவர்கள் பாடசாலையின் பௌதீக வளவிருத்திக்கு பங்களிப்புச் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

- ❖ மாணவர் குடும்பங்களில் கற்றலுக்கு வசதியேற்படுத்தல்,உதவுதல் ஆகிய பிள்ளைநேயப் பண்பைப் பேணுமாறு நாம் பெற்றாரிடம் வேண்டியுள்ளோம்.இப்போதும் வேண்டுகின்றோம்.

- ❖ பாடசாலை அபிவிருத்தித்திட்டம் தயாரித்தலில் பெற்றார்,பழையமாணவர்களின் பங்குபற்றுகை ஒவ்வோராண்டும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.சகல தரப்பினரும் குழுக்களாக ஒன்று கூடி பாடசாலை சுயகணிப்பீடு (SSA) மேற்கொள்ளப்பட்டு அபிவிருத்தி செய்ய வேண்டிய சிறுவர் நேய அம்சங்கள் இனங்காணப்பட்டு குழுக்கலந்துரையாடலில் முன்னுரிமைப்படுத்தி மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித்திட்டம் தயாரிக்கப்படுகின்றது.

- ❖ பாடசாலை சமூகத்தின் பலவேறு தேவைகளுக்குப் பங்களித்து வருகின்றது.ஆலயத்திருவிழாவை முன்னிட்டு சிரமதானம்,டெங்கு ஒழிப்பிற்கான சிரமதானம் என்பன பாடசாலையால் மேற்கொள்ளப்படுகின்றது.

- ❖ பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ,பழைய மாணவர் சங்கம்,பாடசாலை அபிவிருத்திக்குழு ஆகியன அமைக்கப்பட்டுள்ளது.அவர்கள் பாடசாலையின் மேம்பாட்டுக்கு உழைத்துவருகின்றனர்.மேலும் பலவேறு தேவைகளைக் கொண்டுள்ள எம் பாடசாலையின் அபிவிருத்திக்கு உதவுமாறு பெற்றோர்கள் பழைய மாணவர்கள் அனைவரையும் அனபுடன் வேண்டுகின்றோம்.
  மேலும் அன்பார்ந்த பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளின் கல்வியில் மிகுந்த கவனம் செலுத்துங்கள்.பாடசாலையுடன் எப்போதும் நெருக்கமான தொடர்புகளைப் பேணுங்கள்,பாடசாலைச் செயற்பாடுகளுக்கு பங்களிப்புச் செய்யுங்கள,பாடசாலையின் முன்னேற்றத்தில் ஒவ்வொரு பெற்றோரும்,பழையமாணவரும் பங்காளிகளாகுங்கள்.எப்போதும் எங்கள் பாடசாலை என்ற உணர்வோடு செயற்படுங்கள்.

  மேலும் பழைய மாணவர்கள் என்ற வகையில் கடந்த காலங்களில் எமது பாடசாலைக்குப் பலரும் பங்களித்து வருகின்றனர்.தொடர்ந்தும் அவர்களது ஒத்துழைப்பும்,ஆதரவும் எமக்குத் தேவை.புலம் பெயர் நாடுகளிலும்,உள்நாட்டில் வெவ்வேறு பகுதிகளிலும் பல பழைய மாணவர்கள் எமது தொடர்பின்றியுள்ளனர்.அவர்கள் அனைவரதும் தொடர்புகள் எமக்குத் தேவையாகவுள்ளது.பாடசாலையின் முன்னேற்றத்திலும்,அபிவிருத்தியிலும் பழையமாணவர்களின் முழுமையான பங்களிப்புக்காக நாம் காத்திருக்கின்றோம்.அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
  சமூகப்பங்களிப்பினை மேம்படுத்தும் பணிக்குழுவில் பின்வருவோர் செயற்பட்டுவருகின்றனர். திரு.மு.பேரின்பமூர்த்தி திரு.க.கிருபாகரன் திரு.இ.இளங்கோ திருமதி.ச.தவக்குமார் திரு.இ.கோகுலன்

ஆறாவது பிரமாணம்: **அரச கொள்கைகளின் முறையான அமுலாக்கம்**

அரசாங்கத்தின் கொள்கைத்திட்டங்கள் பாடசாலைச் செயற்பாட்டின் முறையான இயக்கத்திற்குப் பங்களிக்கின்றன.அவற்றை முறையாக அமுலாக்குதல் எமது பாடசாலையில் நடைபெறுகின்றது.

- இலவச பாடநூல்கள்,இலவச சீருடைகள் என்பன உரியகாலத்தில் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்படுகின்றது.
- பாடசாலை உணவு வேலைத்திட்டம் முறையாக அமுல்நடாத்தப்படுகின்றது.
- பாடஉள்ளடக்கம்,ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டி,பாடசாலை மட்டக் கணிப்பீடு ஆகிய செயற்பாடுகள் முறையாக நடைமுறைப்படுத்த முயற்சிக்கப்படுகின்றது.

மேலும் அரச கொள்கைகள்,வேலைத்திட்டங்கள் என்பனவற்றை நடைமுறைப்படுத்துவதில் பிள்ளை நேயத்தன்மை பிரதிபலிக்கும் வகையில் நடைமுறைப்படுத்த நாம் முயற்சிக்கின்றோம்.அதற்குப் பொறுப்பாக அதிபர், திருமதி.ஜெ.ஜெமல்டா, திரு.து.ஜீவானந்தன், திரு.இ.இளங்கோ ஆகியோர் செயற்படுகின்றனர்.

எமது பாடசாலையில் பிள்ளை நேயப் பாடசாலைப் பிரமாணங்களை முழுமையாக அமுலாக்குவதன் மூலம் எமது பாடசாலையை முழுமையான பிள்ளைநேயப் பாடசாலையாக வளர்த்துச் செல்வதற்கு நாம் தொடர்ந்து செயற்படுவோம். இச்செயற்பாட்டினை மேம்படுத்த எங்களோடிணையுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

# எமது பாடசாலையின் அவசிய தேவைகள்

# Important Needs of Our School

எமது பாடசாலை அதிகஷ்டப் பிரதேசத்தில் அமைந்துள்ள போதிலும் இக்கிராமத்திற்கு நிறைவான சேவையை வழங்க வேண்டிய முழுமையான பொறுப்பைக் கொண்டுள்ள பாடசாலையாகும்.இப்பாடசாலை தனது தேவைகளை முழுமையாக நிறைவேற்றிக் கொள்ளும் பட்சத்திலேயே முழுமையான சேவையினை இக்கிராமத்திற்கு வழங்க முடியும்.எனவே இதுவரை எமது பல தேவைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள நிலையிலும் தொடர்ந்தும் நிறைவேற்ற வேண்டிய பல முக்கிய தேவைகள் எம்முன் உள்ளன.

அவற்றைக் கல்வித்திணைக்களங்கள்,அரசசார்பற்ற நிறுவனங்கள்,பெற்றோர்கள்.பழைய மாணவர்கள்,நலன்விரும்பிகள் ஆகிய பல தரப்பினரதும் ஒத்துழைப்புடன் நிறைவேற்ற வேண்டியுள்ளது. அவ்வாறாக நாம் இனங்கண்டுள்ள பிரதான தேவைகள் சில பின்வருமாறு

1. வகுப்பறைக்கட்டடத் தொகுதியொன்றை புதிதாக அமைத்தல்.
   ஆரம்ப,இடைநிலை வகுப்புக்களில் நிலவும் இடநெருக்கடியைத் தவிரத்துக் கொள்வதற்கு ஏதுவாகும்.

2. பாடசாலை வேலிக்கு சுற்றுமதில் அமைத்தல்.
   பாதுகாப்பான வேலி அமைக்கப்படின் பாடசாலைத் தோட்டத்தை பயன்தரும் வகையில் பயன்படுத்த வசதியாக அமையும்.

3. பாடசாலை வகுப்பறைகளுக்கு மின்சார வசதியினை ஏற்படுத்துதல்.
   கற்றற்தேவைகளுக்குப் பயன்படுத்தும் வகையில் வகுப்பறைகளுக்கு மின்னிணைப்பினை ஏற்படுத்தல்.

4. சிறுவர் விளையாட்டு முற்றத்தினை திருத்தம் செய்து சீரமைத்தல்
   சிறுவர் பூங்காவை விளையாட்டுக்குகந்த இடமாக மாற்ற வேண்டியுள்ளது.

5. மாணவர்களின் சமய வழிபாட்டிற்கான வழிபாட்டிடம் அமைத்தல்
   சமய வழிபாட்டினைச் செய்வதற்கு ஏற்ற வகையில் வழிபாட்டுப்பீடம் அமைத்து வசதியளித்தல்.

இத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக நாம் பெரு முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றோம். .புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் பழைய மாணவர்கள் கைகொடுப்பார்கள் என நம்புகின்றோம்.

# எமது பாடசாலையின் அண்மைக்கால விசேட நிகழ்வுகள்

1. கணினிக் கற்கைக்கூடம் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்களால் 2011.05.24 அன்று திறந்து வைக்கப்பட்டது.

2. விஞ்ஞான ஆய்வுகூடம் காணி விவசாய அமைச்சின் செயலாளர் திரு. R.M.R அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 20-7-2011

3. சுற்றாடல் செயற்பாடுகள் செய்முறை பயிற்சி நிகழ்வு ஆரம்பக்கல்விப்பிரிவில் 20.07.2011 தினத்தில்மேற்கொள்ளப்பட்டது.

4. பரிசளிப்பு விழா -2011.09.17 இல் நடைபெற்றது.இவ்விழாவில் பிரதம விருந்தினதாக யாழ்ப்பாணம் கல்விவலயத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு.யோ.ரவீந்திரன் அவரகள் கலந்து சிறப்பித்தார்கள்.
   சிறப்பு விருந்தினராக கோட்டக்கல்விப்பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம் அவர்களும்,சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திரு.ச..அருந்தவரத்தினம் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

5. நவராத்திரிக் கலை விழாவும்,ஆசிரிய தின விழாவும் 06.10. 2011 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

6. இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்-2012.03.17 ஆந் திகதி நடைபெற்றது.இப்போட்டியில் திரு.திருமதி 'சண்.தயாளன் அவர்கள் கலந்து கொண்டனர்.

7. தமிழ் மொழித்தினவிழா 30.05.2012 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது.இவ்விழாவில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திரு.த.கோபாலகிருஷ்ணன்,ஆசிரிய ஆலோசகர் திருமதி கௌரி முகுந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

8. வாசிப்பு முகாம் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கானது யூலை 20.07.2012 ஆந் திகதி நடைபெற்றது.

9. யாழ் எய்ட் நிறுவனத்தினரால் மாணவர்களுக்கான உதவிவழங்கல் நிகழ்வு 14.09.2012 அன்று நடைபெற்றது.

# எமது நன்றிகள்

எமது பாடசாலையின் வளர்ச்சிக்காக தமது பங்களிப்பை இதுவரை நல்கிய அனைவரைக்கும் எமது நன்றிகளை இவ்வேளையில் தெரிவித்துக்கொள்கின்றோம்.குறிப்பாக இப்பாடசாலையில் பணியாற்றிய முன்னாள் அதிபர்கள்,ஆசிரியர்கள் அனைவருக்கும் .இவ்வேளையில் எமது நன்றிகளும்,பாராட்டுக்களும் உரித்தாகுக.

பாடசாலையின் அபிவிருத்திக்காக பங்களிப்பினை நல்கிய,நல்கி வருகின்ற பெற்றோர்கள்,பழையமாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.அதேவேளை பாடசாலையின் அபிவிருத்திக்காக காத்திரமான பங்களிப்புக்களை தொடர்ந்து வழங்குமாறு அனைவரையும் இவ்வேளையில் வேண்டுகின்றோம்.

எமது பாடசாலையின் அபிவருத்திக்காக பௌதீகவளத்தேவைகள்,மனிதவளத்தேவைகள் மற்றும் பல்வேறு தேவைகளையும் நிறைவு செய்து தருவதில் மிகுந்த கவனத்துடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் மாகாணக் கல்வித்திணைக்களப் பணிப்பாளர்கள்,வலயக்கல்விப் பணிப்பாளர்,முன்னாள்வலயக்கல்விப்பணிப்பாளர்கள்,பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள்,கோட்டக்கல்வி ப் பணிப்பாளர்கள்,உதவிக்கல்விப் பணிப்பாளர்கள்,சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் அனைவருக்கும் இவ்வேளையில் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றோம்.

குடிநீர் வசதியளித்தல்,மலசலகூட வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றில் நிறைவான வசதியை ஏற்படுத்தித் தந்த யுனிசெவ் நிறுவனத்தின் அதிகாரிகளுக்கும்,தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கும் இவ்வேளையில் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் பாடசாலையின் வசதியேற்படுத்தலுக்காகவும்,மாணவர்களின் போஷாக்கு மற்றும் வசதிகளை மேம்படுத்தலுக்காகவும் உதவிகளை வழங்கிய நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களுக்கு இவ்வேளையில் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.கோப்பாய் லயன்ஸ் கழகம்,ஒரு பானைத்திட்டம்,யாழ் எய்ட் நிறுவனம் ஆகியவற்றுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலையின் முன்னேற்றத்திற்காக அக்கறையுடன் செயற்பட்டுவரும் பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள்,பழைய மாணவர்சங்க உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள்,நலன் விரும்பிகள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

எமது பாடசாலையின் வளர்ச்சிக்காக என்னோடிணைந்து பணியாற்றுகின்ற எமது பாடசாலை ஆசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.தொடர்ந்து பணியில் சிறந்து வித்தியாலயத்தின் முன்னேற்றத்திற்காக உழைக்க வேண்டுமென இவ்வேளையில் வாழ்த்துகின்றேன்.

அன்பார்ந்த மாணவர்களே சமூகத்தின் எதிர்பார்ப்புக்களுக்கேற்ப நல்மனிதர்களாக வாழ்வதற்காக பாடசாலைக்காலத்தை சிறப்பாகப் பயன்படுத்தி தரமான கல்வியையும்,நல்லொழுக்கத்தையும் நிறைவாகப்பெற்று நல்மனப்பாங்குள்ள மனிதர்களாக மலர இவ்வேளையில் உங்கள் அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

இறுதியாக இன்றைய எமது பரிசில் நாள் விழாவில் எமது அழைப்பை ஏற்று வருகைதந்து விழாவைச் சிறப்பித்துக்கொண்டிருக்கும் பிரதமவிருந்தினர் அவர்களுக்கும்,சிறப்பு விருந்தினர்கள்,ஏனையவிருந்தினர்கள்,அயற்பாடசாலைகளின்அதிபர்கள்,ஆசிரியர்கள்,பெற்றோர்க ள்,பழைய மாணவர்கள்,நலன்விரும்பிகள்,மாணவர்கள் அனைவருக்கும் எனது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி வணக்கம் திரு.J.A.தவநாயகம்

அதிபர்.

## அதிபர்,ஆசிரிய விபரம்

# Our Acadamy Staff

| இல | ஆசிரியர் பெயர் | சேவைத்தரம் | கல்வித்தகைமை / தொழிற்தகைமை |
|---|---|---|---|
| 1 | திரு.J.A.தவநாயகம் | **SLPS 2II** | B.A,Dip.in.Edu, M.Ed ,D.S.M |
| 2 | திரு.மு.பேரின்பமூர்த்தி | **SLTS 2II** | Sp Trd - Commerce |
| 3 | திரு.S.ரவிச்சந்திரன் | **SLTS 2II** | B.sc, Dip.in.Edu |
| 4 | திரு.சு.இந்திரகுமார் | **SLTS 2II** | B.sc, Dip.in.Edu |
| 5 | திரு.பொ.பரஞ்சோதி | **SLTS 2II** | Sp Trd - Primary |
| 6 | திருமதி.ச.தவக்குமார் | **SLTS 2II** | Sp Trd - Primary |
| 7 | திரு.ந.சிவாகரன் | **SLTS 2II** | Sp Trd –Agriculture -Part time |
| 8 | திரு.து.சயந்தன் | **SLTS 3I** | Sp Trd - English |
| 9 | திரு.க.கிருபாகரன் | **SLTS 3I** | B.A |
| 10 | திரு.து.ஜீவானந்தன் | **SLTS 3I** | B.A(Hons) |
| 11 | திருமதி.J.ஜெபரட்ணதாஸ் | **SLTS 3I** | B.A |
| 12 | திருமதி.வி.நவநீதன் | **SLTS 3I** | B.A(Hons) |
| 13 | திரு.இ.இளங்கோ | **SLTS 2II** | N.C Dip - Primary |
| 14 | திரு.இ.கோகுலன் | **SLTS 2II** | HNDA |
| 15 | திருமதி.ஜ.பிரபாகரன் | **SLTS 3I** | B.FA(Music) |
| 16 | திருமதி.சா.கீர்த்திசிங்கன் | **SLTS 3I** | B.FA(Art) -Part time |

# பரிசில் பெறும் மாணவர் விபரம்

# PRIZE WINNERS

★ கடந்த 2011 ஆம் வருடத்தில் வகுப்புவாரியாக கல்வி அடைவு மட்டத்தில் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்கள் விபரம்:

| பிரிவு | அதிவிசேடம் | விசேடம் | சாதாரணம் |
|---|---|---|---|
| தரம் 1 | வி.வித்யா<br>லி.அஸ்வினி<br>க.சந்தோஷ்<br>சி.வஜிந்தன் | ஸ்ரீ.புதுமிகன்<br>இ.லதுர்சன் | வி.வினோதினி<br>ச.துளசிகா<br>வி.வினோபா<br>சு.சுமன்<br>தி.தமிழ்விழி |
| தரம் 2 | க.ஜனோபா<br>ப.வைஸ்ணவி<br>ப.கம்ஷா | கி.நிலக்சன் | கி.வானதி<br>ஜெ.அபிரா<br>சி.கஜானா |
| தரம் 3 | பொ.சுவேதா | த.அபிநயா<br>கிஜீவிகா<br>மோ.டினோஜன்<br>வி.தர்மிசன் | கெ.பிரியங்கா<br>பா.நிறோஜா |
| தரம் 4 | கே.மதுமிலன் | உ.சாளினி<br>இ.திலக்சிகன்<br>கோ.யகீசன்<br>சு.கலையருவி | வி.யானுஜா |
| தரம் 5 | - | வி.நிரோஜன்<br>சு.சாருஜா<br>பி.பிரதாபன் | - |
| தரம் 6 | கோ.விதுசன் | க.சுஜீவா<br>பா.தினேசா<br>க.நிருத்திகா | ஜெ.அஜிந்தா<br>வி.சுவேதிகா<br>ச.கஜீபனா<br>மு.யாழினி |
| தரம் 7 | - | ச.சஸ்ரீபா | லி.நிசாந்தாஸ்<br>க.கனுசன்<br>ச.நிவேரா<br>வி.ஜனித்தா |
| தரம் 8 | - | செ.லவண்யா | கி.ஜீவகன்<br>கு.ஜெசிந்தா<br>க.பிரசன்<br>ஜெ.அஜிந்தாஸ் |
| தரம் 9 | - | அ.நிருபா | லோ.கீர்த்திகன்<br>யோ.நிதர்சன்<br>கு.சர்விகா<br>த.தர்சிகா<br>பு.மதுர்சா<br>ம.யசிதா<br>ம.சுபாஜினி |
| தரம் 10 | - | மோ.பிரசாந்தினி | இ.கீர்த்தனா<br>ந.பிரதீப்<br>லி.ஜெசிந்தாஸ்<br>ப.கஜிதா<br>இ.சுரேகுலன் |

★ **இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் வெற்றி பெற்றோர் விபரம் :**

❖ 1.தமிழ்மொழித்தினம் - 2011

| பிரிவு | நிகழ்ச்சி | பாடசாலை மட்டம் | கோட்ட மட்டம் | வலய மட்டம் |
|---|---|---|---|---|
| 1 | ஆக்கம்<br>எழுத்து<br>வாசிப்பு<br>ஆக்கத்திறன் வெளிப்பாடு<br>பேச்சு<br>பாவோதல்<br>இசையும்அசைவும் | க.திவ்யா<br>க.திவ்யா<br>இ.யதுசன்<br>வி.நிறோஜன்<br><br>கே.மதுமிலன்<br>கோ.யகீசன்<br>க.திவ்யா | - | - |
| 2 | கட்டுரை வரைதல்<br>வாசிப்பு<br>பேச்சு<br>பாவோதல்<br>தனி இசை | ச.சஸ்ரீபா<br>வி.ஜனித்தா<br>கோ.விதுசன்<br>க.சுஜீவா<br>ஜெ.அஜிந்தா | ச.சஸ்ரீபா 1'st | ச.சஸ்ரீபா 2'nd |
| 3 | கட்டுரை வரைதல்<br>பேச்சு<br>பாவோதல்<br>தனி இசை | கி.ஜீவகன்<br>செ.லவண்யா<br>பு.மதுர்சா<br>ம.சுபாஜினி | | |
| 4 | கட்டுரை வரைதல்<br>இலக்கணப்போட்டி<br>கவிதை ஆக்கம்<br>சிறுகதை ஆக்கம்<br>பேச்சு<br>பாவோதல்<br>தனி இசை | ஈ.சுசீபா<br>கி.கிர்த்திகா<br>றெ.நிவேதன்<br>வி.விதித்தா<br>அ.லாவண்யா<br>இ.சயந்தா<br>இ.ரேகா | கி.கிர்த்திகா 2'nd | |

❖ 2.கணித வினாவிடைப்போட்டி 2011(பாடசாலை மட்டம்)

| தரம் | பெயர் | தரம் | பெயர் |
|---|---|---|---|
| 6 | கோ.விதுசன் - 1<br>க.சுஜீவா - 2<br>க.நிருத்திகா - 3 | 9 | - 1 அ.நிருபா<br>- 2 ம.யசிதா<br>- 3 யோ.நிதர்சன் |
| 7 | ச.சஸ்ரீபா - 1<br>செ.லகீசன் - 2<br>இ.தனுசன் - 3 | 10 | லி.ஜெசிந்தாஸ் - 1<br>ந.பிரதீப் - 2<br>இ.சுரேகுலன் - 3 |
| 8 | செ.லவண்யா - 1<br>கி.ஜீவகன் - 2<br>ஜெ.அஜிந்தாஸ் - 3 | 11 | றெ.நிவேதன் - 1<br>கி.கிர்த்திகா - 2<br>ஈ.சுசீபா - 3 |

## ❖ 3.“பன்மைத்துவக்கலாசாரம் ஊடாக சமாதானம்”

பாடசாலை மாணவர்களுக்கான சித்திரப்போட்டி- 2011

கோட்ட மட்டம் - லோ.கீர்த்திகன் பிரிவு – 3 - இரண்டாம் இடம்

## ❖ 4. ஆரம்பக்கல்விச்செயற்பாடுகள் - 2011

| இல | போட்டி வகை | பெயர் | தரம் | நிலை |
|---|---|---|---|---|
| 1 | திருக்குறள் மனனம் | ப.வைஷ்ணவி | 2 | இரண்டாம் இடம் |
| 2 | வாய்பாடு மனனம் | கோ.யகீசன்<br>பொ.சுவேதா | 4<br>3 | மூன்றாம் இடம்<br>எட்டாம் இடம் |
| 3 | சித்திரப்போட்டி | இ.யதுஷன்<br>த.அபிநயா | 5<br>3 | ஐந்தாம் இடம்<br>பத்தாம் இடம் |

## ❖ 5. ENGLISH DAY COMPETITION – 2011

| No | Events | Grade | School Level | Divisional Level |
|---|---|---|---|---|
| 1 | Copy Writing | 3 | P.Suvetha -1’st<br>M.Dinojan– 2’nd | - |
| | | 4 | K.Nilani -1’st<br>S.Kalaiyatuvi – 2’nd | |
| | | 5 | G.Paveeshan-1’st<br>R.Jathushan– 2’nd | |
| | | 6 | B.Thinesha-1’st<br>V.Suvethika– 2’nd | |
| | | 7 | R.Thanushan-1’st<br>V.Janitha– 2’nd | |
| | | 8 | G.Pirasan-1’st<br>K.Jesintha– 2’nd | |
| | | 9 | M.Subasini-1’st<br>A.Niruba– 2’nd | |
| | | 10 | P.Kajitha-1’st<br>G.Jamesha– 2’nd | P.Kajitha-3’rd |
| | | 11 | V.Vithitha-1’st<br>A.Lavanya– 2’nd | |
| 2 | Recitation | 3 | K.Jeevika-1’st<br>P.Suvetha– 2’nd | |
| | | 4 | K.Mathumilan-1’st<br>K.Jakeeshan– 2’nd | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 5 | P.Pirathapan-1'st<br>V.Nirojan– 2'nd | |
| | | 6 | K.Niruththika-1'st | |
| | | 7 | C.Sasteepa-1'st<br>L.Nisanthas– 2'nd | |
| | | 8 | S.Lavanya<br>K.Jesintha | |
| | | 9 | A.Niruba<br>P.Mathursha | |
| | | 10 | G.Jamesha<br>M.Mythily | |
| | | 11 | V.Vithitha<br>K.Keerthika | |
| 3 | Reading Aloud | 4 | K.Mathumilan<br>K.Jakeeshan | |
| | | | V.Nirojan<br>R.Jathushan | |
| 4 | Dictation | 6 | K.Vithushan<br>K.Niruththika | |
| | | 7 | R.Thanushan<br>L.Nisanthas | |
| | | 8 | K.Jeevakan<br>J.Ajinthas | |
| | | 9 | M.Subasini<br>V.Vinojan | |
| | | 10 | P.Kajitha<br>M.Pirasanrhiny | |
| | | 11 | A.Lavanya<br>K.Keerthika | |
| 5 | Creative Writing | 6 | K.Vithushan<br>B.Thinesha | |
| | | 7 | C.Sasteepa<br>V.Janitha | |
| | | 8 | K.Jeevakan<br>J.Ajinthas | |
| | | 9 | P.Mathursha<br>T.Tharsika | |
| | | 10 | M.Pirasanrhiny<br>R.Keerthana | |
| | | 11 | S.Lavojan<br>B.Thusipuvan | |

❖ 6. வணிக அறிவுப்போட்டி – 2011(கோட்ட மட்டம்)

1.செல்வி கிருஷ்ணமூர்த்தி கிர்த்திகா – தரம் 11 ( பேச்சு - இரண்டாம் இடம்)

❖ 7. சமூக விஞ்ஞான பொது அறிவுப்போட்டி:
வலயமட்டத்தில்வெற்றியீட்டியோர்

| இல | பெயர் | தரம் | நிலை |
|---|---|---|---|
| 1 | கோ.விதுஷன் | 6 | முதலாம் இடம் |
| 2 | க.சுஜீவன் | 6 | இரண்டாம் இடம் |
| 3 | க.நிருத்திகா | 6 | மூன்றாம் இடம் |
| 4 | லி.ஜெசிந்தாஸ் | 10 | முதலாம் இடம் |
| 5 | ஈ.சுசீபா | 11 | முதலாம் இடம் |
| 6 | றெ.நிவேதன் | 11 | இரண்டாம் இடம் |

## ★ விசேட பரிசில்கள் :

1. உயர்வான பாடசாலை வரவினைக் கொண்டோர்:-

❖ 1. கடந்த ஆண்டில் (2011) 200 பாடசாலை நாட்களில் முழுமையாக வருகை தந்து 100%

வரவினை உறுதிப்படுத்திய மாணவர்கள்:-

1.க.கஜானன் தரம் - 3

2.கி.விஷ்ணுகா தரம் - 7

3.இ.சுரேகுலன் தரம் - 11

4.அ.லாவண்யா தரம் - 11

## ❖ 2. G.C.E.O/L – 2011

❖ சிறப்பு சித்தி பெற்றோர் :

1. செல்வி கிர்த்திகா கிருஷ்ணமூர்த்தி – 7A , B, S (பல வருடங்களின் பின் ஆங்கில பாடத்தில் சித்தி பெற்றவர்)

2. .செல்வன் றெஜினோல்ட் நிவேதன் - 8A

3..செல்வி சுசீபா ஈஸ்வரன் 6A 2C

4 .செல்வி லாவண்யா அன்னசெல்லபாக்கியரதன் - 4A ,B,3C

❖ சித்தியடைந்த ஏனையவர்கள் :

1. செல்வன் தவேந்திரராஜா அரிகரன்
2. செல்வன் பாரதிதாசன் துசிபுவன்
3. செல்வன் செல்வநாதன் லவோஜன்
4. செல்வி சயந்தா இலட்சணமூர்த்தி

### தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை -2012

1. செல்வன் கேசவரூபன் மதுமிலன்- 171 புள்ளிகளைப் பெற்று புலமைப்பரிசில் பெறும் தகைமையைப் பெற்றுள்ளார்.
2. 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற ஏனைய மாணவர்கள்:
    1. செல்வன் இந்திரகுமார் திலக்ஷிகன் -127 புள்ளிகள்
    2. செல்வி.உருத்திரசிங்கம் சாளினி -120 புள்ளிகள்
    3. செல்வி ஜானுசா விஜயானந்தன் -109 புள்ளிகள்



# யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்

## புத்தூர்

பரிசில் நாள் -2012

அதிபர் அறிக்கை

PRIZE DAY – 2012

# Principal's Report

Chief Guest : Mr.V.Selvarajah Esq

( Z.D.E .Jaffna Zone)

Special Guest : Mr.K.Ratnakumar Esq

(Principal .- J/Union College ,Old Student)

J/VATHARAWATTAI VIGNESWARA VIDYALAYAM

PUTTUR

**06.10.2012**